நல்லூர் ... மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# உதயன்

சுடர் : 36 கதிர் : 207 | திங்கட்கிழமை | ஆனி 07 ஆம் நாள் 21 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111



# 'டெல்டா'வுக்காக முடக்க முடியாது

### பொறுப்பின்றி மக்கள் நடந்தால் இந்தியாவின் நிலைமைதானாம்

கொழும்பு, ஜூன் 21

**மருத்துவர்கள் மற்றும் சுகாதார நிபுணர்களின் வேண்டுகோளின் படி 'டெல்டா' கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக முழு நாட்டையும் தொடர்ந்து முடக்கி வைத்திருக்க முடியாது.**

19 ➤

## கொரோனா 2,028

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 28 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று

17 ➤

## வடக்கில் 43!

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாணத்தில் நேற்று 43 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்

17 ➤

## சாவு 47!

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி நேற்றுமுன்தினம் 47 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம்

17 ➤

## நாட்டைத் திறப்பதால் 'டெல்டா' தீவிரமாகும்

### சுகாதார சேவை முற்றிலும் திறன் இழக்கும் அரசுக்கு மருத்துவர்கள் மீண்டும் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 21

மிகவேகமாகப் பரவக்கூடியதும் அதிக உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடியதுமான டெல்டா வைரஸ் இலங்கையில் சமூகமட்டத்திலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

19 ➤

## பயணக் கட்டுப்பாடு இன்றுமுதல் தளர்வு!

### மீண்டும் புதன் இரவு அமுல் வெள்ளி காலை மீளத் தளர்வு

கொழும்பு, ஜூன் 21

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக இலங்கை முழுவதும் கடந்த ஒரு மாதம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த முழுநேரப் பயணக் கட்டுப்பாடு இன்று முதல் தளர்த்தப்படுகின்றது. தேசிய கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச விடுத்த பணிப்பு

19 ➤

## ஜெனிவா இன்று!

### இலங்கை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும்

கொழும்பு, ஜூன் 21

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 47ஆவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது. ஜூலை 13ஆம் திகதிவரை நடைபெறவுள்ள மேற்படி கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படவுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர்

19 ➤

## மதுவிற்பனை நிலையங்களை இன்று திறக்க அனுமதி!

கொழும்பு, ஜூன் 21

பயணக் கட்டுப்பாடுகள் இன்று முதல் தளர்த்தப்படும் நிலையில் மது

17 ➤

## நம்பிக்கையில்லாத் தீர்மானம்; கூட்டமைப்பின் முடிவு நாளை

### இரா.சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

எரிபொருள் விலையேற்றத்தை மையமாக வைத்து அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது தொடர்பாக நாளை இடம்பெறும் நாடா

19 ➤

## வடக்கில் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவைகள்

- இ.போ.ச., தனியார் அறிவிப்பு
- வர்த்தக நிலையங்கள் திறக்கும்
- சந்தைகள் இயங்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 21

தொடர் முடக்கம் இன்று தளர்த்தப்படும் நிலையில் போக்குவரத்துச் சேவை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வடக்கில் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை போக்குவரத்து சபையும், தனியார் போக்குவரத்து சங்கங்க

19 ➤

## ஏழு வீடுகளில் திருட்டு: குழுவொன்று சிக்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 21

உடுவிலில் மருத்துவர் உட்பட அரச உத்தியோகத்தர்களின் வீடுகளை உடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து சமையல் எரிவாயு சிலிண்டர்

19 ➤

### நம்பிக்கையில்லாப் பிரேரணை

## மதில்மேல் பூனையாக முஸ்லிம் எம்.பிக்கள்!

கொழும்பு, ஜூன் 21

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கிய எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலுசக்தி அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்

17 ➤

உதயன்

செய்திகளுக்கு 021 493 0000 077 1209994

விளம்பரங்களுக்கு 021 493 1111 071 6182182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மருத்துவமனைக்கு விரைவில் பி.சி.ஆர். ஆய்வுகூடம்

## சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் ஆராய்வு

**வவுனியா, ஜூன் 21**

**வவுனியா பொது மருத்துவமனைக்கு 3.5 கோடி ரூபா பெறுமதியான பி.சி.ஆர். ஆய்வுகூடத்தொகுதி ஒன்றை விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தொடர்பான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளும் பொர சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சுதத் தர்மரட்ண வவுனியா மருத்துவமனைக்கு நேற்றுக் களப் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தார்.**

வவுனியா மாவட்டத்தில் பெற்றுக்கொள்ளப்படும் பி.சி.ஆர். மாதிரிகள் யாழ். போதனா மருத்துவமனை மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இதனால் காலதாமதம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன.

வவுனியா மருத்துவமனைக்கு பி.சி.ஆர். ஆய்வுகூடத்தொகுதி ஒன்றை வழங்குமாறு வவுனியா மருத்துவமனை நிர்வாகம் மற்றும் பல்வேறு தரப்பினர்களால் தொடர்ச்சியாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன.

அதனடிப்படையில் வவுனியா மருத்துவமனைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் சுதத் தர்மரட்ண 3.5 கோடி ரூபா பெறுமதியான ரூபாய பெறுமதியான பி.சி.ஆர். ஆய்வுகூடத்தொகுதியை இயக்குவதற்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்திருந்தார்.

குறித்த செயற்பாட்டுக்கு வவுனியா மருத்துவமனையின் ஒத்துழைப்புக்கள் தொடர்பாக திருப்திய டைந்த அவர் விரைவில் ஆய்வுகூடத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவுள்ளேன் என்று கூறினார்.



இதேவேளை, வவுனியா மருத்துவமனையில் அமைந்துள்ள கொவிட்-19 விடுதியை பார்வையிட்ட அவர், கொவிட் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக வவுனியா மருத்துவமனை நிர்வாகத்துக்கு தனது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிராந்தியத்தின் கொவிட்-19 நோய்நிலைமை மற்றும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், பி.சி.ஆர். பரிசோதனைகளின் அதிகரிப்பு ஆகியவை தொடர்பாக வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் ராகுலன், பிரதிப்பணிப்பாளருக்கு தெளிவுபடுத்தினார்.

குறித்த நிகழ்வில் வவுனியா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் க. ராகுலன், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.மகேந்திரன் மற்றும் சுகாதார சேவைகள் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வவுனியா மருத்துவமனையில் பி.சி. ஆர். பரிசோதனை ஆய்வுகூடம் இயங்கும் பட்சத்தில் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தாமதமின்றி மிக விரைவாக அறிந்துகொள்ளும் நிலைமை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-110,18)

# 24 கிராமங்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜூன் 21

நாடு முழுவதும் பயணத்தடை இன்று நீக்கப்பட்டாலும் 12 மாவட்டங்களைச் சேர்ந்த 24 கிராம அலுவலர் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் என்று இராணுவத் தளபதி அறிவித்துள்ளார். வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் சாவற்கட்டு கிராமம் மாத்திரமே தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,இ)



# பொலிஸ் நிலையங்கள் நாடு முழுவதும் அமைப்பு

கொழும்பு, ஜூன் 21

பொதுமக்கள் முறைப்பாடுகள் வழங்கும் செயல்முறையை இலகுவாக்குவதற்காக நாடு முழுவதும் 197 புதிய பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்த முயற்சியின் கீழ் ஏற்கனவே 57 பொலிஸ் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஏனைய பொலிஸ் நிலையங்களை விரைவில் நிறுவத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும், என்றார். (ஒ.5.இ)

# மருத்துவமனைகள் கைமாற்றல் அரசமைப்பை மீறும் செயலே!

## அமைச்சர் பவித்திராவுக்கு அவைத் தலைவர் பதிலடி

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மருத்துவமனைகளை கொழும்பு அரசு கையகப்படுத்தும் முயற்சியானது, மாகாணங்களுக்குரிய அதிகாரங்களை மீறும் செயல். அரசமைப்பை மீறும் நடவடிக்கை. இவ்வாறு தெரிவித்து வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, மருத்துவமனைகளை கையகப்படுத்தும் நடவடிக்கை அரசமைப்புக்கு உட்பட்டது என்று தெரிவித்துள்ள நிலையில், அவைத் தலைவர் இவ்வாறு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடக்கு மாகாண சபையின் நிர்வாகத்துக்குட்பட்ட மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்ட பொது மருத்துவமனைகள் கொழும்பு சுகாதார அமைச்சின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுசெல்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக ஊடகச் செய்திகள் மூலம் அறியப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பான எமது ஆட்சேபனையையும் அதிருப்தியையும் தெரிவிப்பதோடு, இது மாகாண சபைகளுக்கு சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீறுவதாக அமைகிறது என்பதை பதிவுசெய்துள்ள விரும்புகின்றேன்.

நாட்டின் அரசமைப்பின்படி மாகாண சபைகள் நியதிச் சட்டம் இயற்ற அதிகாரமளிக்கும் ஒன்பதாவது அட்டவணையின் நிரல் ஐ இன் 11:1 பந்தியின் பின்வரும் ஏற்பாடுகளுக்கு தங்கள் அவதானத்தைக் கோர விரும்புகின்றேன்.

(போதனா மருத்துவமனைகளும் விசேட நோக்கங்களுங்களுக்காகத் தாபிக்கப்பட்ட மருத்துவமனைகளும் தவிர) பொது மருத்துவமனைகளையும் கிராம மருத்துவமனைகளையும் மகப்பேற்று மருத்துவமனைகளையும் மருந்தகங்களையும் தாபித்தலும் பேணுதலும்' இதன்படி போதனா மருத்துவமனைகள் மற்றும் விசேட நோக்கங்களுக்கான மருத்துவமனைகள் தவிர்ந்த ஏனைய மருத்துவமனைகள் யாவும் மாகாண சபைகளின் நிர்வாகத்துக்குட்பட்டவையாகும்.

இந்த ஏற்பாட்டின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரத்துக்கமைய வடக்கு மாகாண சபையானது 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதிய அமர்வில் நிறைவேற்றிய 2015ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சுகாதார சேவைகள் நியதிச் சட்டம் 2016ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி ஆளுநரின் சம்மதம் கிடைக்கப் பெற்று சட்டமாக நடைமுறையிலுள்ளது.

இந்த நியதிச் சட்டத்தின் பிரிவு 3 (அ) இன் கீழான அட்டவணை ஐ இன்படி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைகள் வட மாகாண சபையின் மாவட்ட பொது மருத்துவமனைகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டம் இதில் உள்ளடக்கப்படாத காரணம் இம் மாவட்டத்தில் போதனா மருத்துவமனை ஏற்கனவே இயங்கி வந்தமையே.

இந்த நிலையில் மேற்குறிப்பிட்ட மாவட்ட பொது மருத்துவமனை எதையும் மாகாண சபையிடமிருந்து கொழும்பு சுகாதார அமைச்சு கையேற்பது அரசமைப்புக்கும் மாகாண சபையின் நியதிச் சட்டத்துக்கும் முரணானதாகும்.

இந்த மாவட்ட மருத்துவமனைகளின் சேவைகளிலும் வசதிகளிலும் குறைபாடுகள் காணப்படுவதாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்படுவதாயின், அதற்கான தீர்வு இவைகளை மத்திய மயப்படுத்துவதல்ல. அக்குறைபாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மாகாண நிர்வாகம் ஊடாக மேற்கொள்வதே பொருத்தமானதாகும்.

நிர்வாகம் கொழும்பு சுகாதார அமைச்சின் கீழோ அல்லது மாகாண சபை நிர்வாகத்தின் கீழோ இருந்தாலும் அநேகமாக அதே ஆளணியினரே செயற்படுவர் என்பது தெளிவு. ஏனெனின் மருத்துவத்துறை சார்ந்த சகல அதிகாரிகளும் கொழும்பு சுகாதார அமைச்சால் நியமிக்கப்படுவதுடன் அவர்களது ஒழுங்குக் கட்டுப்பாடும் அதனிடமே உள்ளது.

உண்மையாக இவ் மருத்துவமனைகளுக்குத் தேவை உட்கட்டுமான மேம்படுத்தலும் பொருத்தமான நிபுணத்துவ மருத்துவர்களுமே. இவற்றை நிறைவேற்று வதற்கான போதிய நிதியை மாகாண நிர்வா கத்துக்கு வழங்குவதன் மூலம் சகல குறைபாடுகளும் நிவர்த்திக்கப்படலாம் என்பதே எமது நிலைப்பாடாகும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

மாகாண நிறைவேற்று அதிகாரியாகவுள்ள மூத்த நிர்வாகியாகிய தாங்கள் இவற்றின் மேம்படுத்தலுக்கான நிதியை மாகாண சபை நிர்வாகத்துக்கு வழங்கினால் இனங்காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திக்கும் ஆற்றல் தங்களுக்கு உண்டு என்பதை உயர் மட்டத்துக்கு சுட்டிக்காட்டி இந்த முடிவை மீளாய்வுக்குட்படுத்தி நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் தங்களை அன்புடன் வேண்டுகின்றேன், என்றுள்ளது. (ஒ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு

# உரிய பயிற்சி பெறாத நிலையில் தாதியர்கள் கட்டாய இடமாற்றம்

தாதியர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 21

கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க ஒதுக்கப்பட்ட மருத்துவமனைகளில் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக, பயிற்சி பெறாத தாதியர்கள் அதிதீவிர சிகிச்சை பிரிவுகளுக்கு (ஐ.சி.யூ) மாற்றப்படுகின்றனர் என சுகாதார அமைச்சுக்கு எதிராக, இலங்கை தாதியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் செயலர் மெடிவட்டே தெரிவிக்கையில்: தேசிய கண் மருத்துவமனை மற்றும் தேசிய பல் மருத்துவமனையில் பணியாற்றிய தாதியர்கள், சேர் ஜோன் கொத்தலாவ பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அவர்களைத் தவிர மேலும் 15 தாதியர்கள் நாடு முழுவதும் இடமாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் பணியாற்ற உரிய பயிற்சியைப் பெறவில்லை.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் பின்பற்றப்படும் நடைமுறைகள் தெரியாது என்பதால் அங்கு சிகிச்சை பெறுபவர்களின் உயிருக்குப் பொறுப்பேற்க முடியாது என்ற கடிதங்களை பயிற்சி பெறாது கட்டாய இடமாற்றம் மேற்கொள்ளப்பட்ட தாதியர்கள் வழங்கியுள்ளனர்.


வேறு எந்த முயற்சிகளும் முன்னெடுக்காமல் இவ்வாறான ஆபத்தான ஒன்றை அவர்கள் செய்துள்ளனர். அங்குள்ள மொனிட்டர்களைப் படித்து தேவையான சிகிச்சையை இந்தத் தாதியர்களால் வழங்க முடியுமா? இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சிடம் கேள்வி எழுப்பினோம். தகுதி பெற்ற தாதியர் ஒருவரின் கீழ்தான் அவர்கள் அங்கு பணிபுரியப் போகின்றனர் என்று கூறுகின்றனர். இவ்வாறான தொற்று நிலைமையில் தாதியர் ஒருவரின் கீழ் பயிற்சி பெறுவது போதுமானதா? இது பொருத்தமான நடைமுறை இல்லை- என்றார்.

இதேவேளை, தாதியர் சங்கத்தின் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத், பயிற்சி பெற்ற தாதியர்களே இடமாற்றம் செய்யப்படுகின்றனர் என்று குறிப்பிட்டார். (ஒ.5,இ)

# கொரோனாத் தடுப்பூசி விற்பனை: விசாரணையை ஆரம்பித்தது அமைச்சு

கொழும்பு, ஜூன் 21

கொரோனாத் தடுப்பூசிகளை விற்பனைசெய்வது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் சுகாதார அமைச்சு உள்ளக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என, சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில், தடுப்பூசியை விற்பனை செய்ய யாருக்கும் அரசு அனுமதியை வழங்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில், அவ்வாறு விற்பனை செய்யப்பட்டன எனக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

இவ்வாறான செயல்களில் ஈடுபட்டவர்கள் கண்டறியப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சுகாதார அமைச்சு தவிர்ந்த ஏனைய தரப்பின் ஊடாக தடுப்பூசிகள் விற்பனை செய்யப்பட்டால் அதனை வாங்க வேண்டாம் என்று பொதுமக்களை அறிவுறுத்துகின்றோம்- என்றார்.

இதேவேளை அஸ்ராஜெனகா தடுப்பூசி 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது என கடந்த காலத்தில் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டிருந்தது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளே அதற்கு உடந்தையாகச் செயற்பட்டனர் எனவும் கூறப்பட்டது. ஆனால் அவர்கள் அதனை மறுத்திருந்தனர். மேலும், நண்பர்கள், உறவினர்களுக்கு தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டன எனும் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஹபரதுவா பகுதியில் சைனோஃபோர்ம் தடுப்பூசி திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,இ)

உலக சுகாதார நிறுவனத்தின்

# நிபந்தனைகள் பூர்த்தியானாலே அஸ்ராஜெனகா தடுப்பூசி

- சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்
- நிபந்தனை விதிப்பு தெரியாது என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 21

உலக சுகாதார அமைப்பின் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தாலே, அவர்களால் நன்கொடையாக வழங்கப்படும் அஸ்ராஜெனகா தடுப்பூசியை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். ஆனால் அவ்வாறான நிபந்தனைகள் விதிக்கப்பட்டமை எதுவும் தெரியாது என்று மருந்து உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

உலக சுகாதார அமைப்பு, கொரோனாத் தடுப்பூசிகளின் உலகளாவிய அணுகுதல் திட்டத்தின் கீழ் பல நாடுகளுக்கு அஸ்ராஜெனகா தடுப்பூசிகளை இலவசமாக வழங்கவுள்ளது. எப்போது வழங்கப்படும் என்பது தொடர்பான அறிவிப்பு பெரும்பாலும் நாளைமறுதினம் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை வெளிவரும். 'இந்தத் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு 2 லட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கும் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. நாங்கள் அதிகளவான தடுப்பூசிகளைக் கோரியுள்ளோம். ஆகக் குறைந்தது 6 லட்சம் தடுப்பூசிகளாவது தேவை. நாங்கள் குறைந்தபட்சம் 2 லட்சத்து 64 ஆயிரம் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வோம்' என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

உலக சுகாதார நிறுவனத்தின் இந்தத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கை சில நிபந்தனைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். அதனை உலக சுகாதார நிறுவனத்துக்கு அறிவித்த பின்னர்தான், அஸ்ராஜெனகா தடுப்பூசி எப்போது வழங்கப்படும் என்ற திகதியை அவர்கள் அறிவிப்பார்கள் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (ஒ.5,இ)

# ஜூலை 5இல் பைசர் தடுப்பூசிகள் இலங்கைக்கு

கொழும்பு, ஜூன் 21

26 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் அடுத்த மாதம் 5ஆம் திகதி இலங்கைக்கு கிடைக்கப்பெறும் என்பதை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தினுஷா தஸ்நாயக்க மேலும் தெரிவிக்கையில்,

பைசர் தடுப்பூசியின் முன்னோடித் திட்டமாக 26 ஆயிரம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டு நாட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன.

இதன் பின்னரே வணிக ரீதியான மேலதிக கொள்வனவு தொடர்பான ஏற்பாடுகள் இடம்பெறும்.

மேலும் பைசர் தடுப்பூசி மறை நிலையில் 80 பாகையில் வைத்துப் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குரிய வசதிகளை நாங்கள் வைத்திருக்கின்றோம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்திய பின்னர்தான், மேலதிகமாக கொள்வனவு செய்ய முடியும்- என்றார். இதேகருத்தை வலியுறுத்திய, உற்பத்தி, வழங்கல் மற்றும் மருந்து ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன்ன, பைசர் தடுப்பூசியை இலங்கையில் சேமித்து வைக்கக்கூடிய வசதி இருப்பதை உற்பத்தியாளர்களுக்குத் தெரியப்படுத்தினோம். அவர்கள் அதில் திருப்தியடைந்தார்கள் என்று குறிப்பிட்டார். (ஒ.5,இ)




# மாத இறுதிக்குள் 10 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள்

ஸ்புட்னிக் வி தாமதமாகலாம்

கொழும்பு, ஜூன் 21

சீனாவிடம் கொள்வனவுசெய்யப்பட்ட மேலும் ஒரு மில்லியன் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் இந்த மாத இறுதிக்குள் கிடைக்கப்பெறும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தினுஷா தஸ்நாயக்க தெரிவித்தார். ஆனால் திகதி இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டார். இதேவேளை ரஷ்யாவின் 1.2 மில்லியன் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் இந்த மாதத்துக்குள் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்கப்பெறவேண்டும். ஆனாலும் உரிய காலத்துக்குள் அவை கிடைக்கும் என்பதை உற்பத்தியாளர்கள் உறுதிப்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன்ன, இந்தியாவில் ஏற்பட்ட மூன்றாவது அலை காரணமாக, ஸ்புட்னிக் வி தடுப்பூசிகள் முன்னுரிமை அடிப்படையில் அங்கு வழங்கப்பட்டதால் எமக்குத் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். (ஒ.5,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கப்பல் பேரழிவு

## இடைக்கால இழப்பீட்டு தொகை இன்னமும் கிடைக்கவில்லை

கொழும்பு, ஜுன் 21
எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் பேரழிவு தொடர்பில் இலங்கை கோரிய முதலாவது இடைக்கால இழப்பீட்டுக் கோரிக்கைக்கு ரிய கொடுப்பனவும் இன்னமும் கிடைக் கப்பெறவில்லை.
கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை, சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக கப்பல் நிறுவனத்தின் உரிமையா ளருக்கு கோரிக்கை கடிதம் அனுப்பி வைத்திருந்தது.
ஆனாலும் கப்பல் நிறுவனத்திடமிருந்து எந்தவொரு கொடுப்பனவும் இலங்கைக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று கட லோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரும் சட்டத்தரணி யுமான தர்ஷினி லஹந்தபுர தெரிவித் துள்ளார்.
'அவர்களிடமிருந்து இழப்பீடு செலுத்து வது தொடர்பில் சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன. ஆனாலும் அவர்களின் சட்டத்தரணிகள் நாங்கள் அனுப்பிய ஆவ ணங்களை ஆராய்ந்து வருகின்றனர்.
இழப்பீடு இலங்கைக்கு கிடைப்பதற்கு சிறிது தாமதமாகலாம்.
ஆனாலும் அதனை வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கின்றது' என்று லஹந்தபுர குறிப்பிட்டார்.
சுற்றுச்சூழல் இழப்பு தொடர்பான முழுமை யான மதிப்பீட்டை இலங்கை இன்னமும் தயாரித்து முடிக்கவில்லை என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.5.இ)

# உயர்தர வகுப்பு மாணவர்களுக்காவது தடுப்பூசியை விரைந்து வழங்கக் கோரிக்கை

கல்வி அமைச்சின் செயலர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜுன் 21**

**பாடசாலை சமூகத்தினருக்கு தடுப்பூசி ஏற்றி பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் திட்டத்துடனேயே செயற்பட்டு வருகின்றோம். முதல் கட்டமாக உயர்தர வகுப்பு மாணவர்களுக்காவது தடுப்பூசி ஏற்றுவதை உடனடியாகச் செயற்படுத்தவேண்டும்.**

எமது கோரிக்கைகளுக்கு சுகாதார அமைச்சிடமிருந்து இதுவரை பதில் இல்லை. இவ்வாறு கல்வி அமைச்சின் செயலர் கபில பெரேரா தெரிவித்தார்.
பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமை யில் அண்மையில் நடைபெற்ற கலந் துரையாடலில், கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் குழந்தை மருத் துவ நிபுணர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு விரைந்து தடுப்பூசி களை ஏற்றி பாடசாலைகளை மீளத் திறப்பதற்கு முடிவுசெய்யப்பட்டுள்ளது.
இதற்கு அமைவாக சுகாதார அமைச் சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளது. ஆகக் குறைந்தது முதல் கட்டமாக உயர்தர வகுப்பு மாணவர்க ளுக்கு தடுப்பூசி ஏற்றுமாறு சுகாதார அமைச்சை கல்வி அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. ஆனாலும் எந்த வொரு சாதகமான பதிலும் சுகாதார அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற வில்லை. மேலும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது தொடர்பிலும் ஆராயப்படுகின்றது.
இதேவேளை நாடு முழுவதும் பாடசா லைகளைத் திறப்பதற்கு 2 லட்சத்து 79 ஆயிரத்து 20 தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன. சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தடுப்பூசி முன்னுரி மைப் பட்டியலில் பாடசாலை மாணவர் கள் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5.இ)

## தொற்று உயிரிழப்பு விவரங்கள்: தவறுகள் திருத்தப்பட்டுள்ளன

கூறுகிறார் பணிப்பாளர்

கொழும்பு, ஜுன் 21
கொரோனாத் தொற்று தொடர்பான உயிரிழப்பு விவரங்கள் வெளியிடு வதில் காணப்பட்ட முரண்பாடுகள், தவறுகள் களையப்பட்டுள்ளன என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.
கொரோனாத் தொற்று தொடர்பான உயிரிழப்பு தகவல்களின் முரண்பா டுகள் நிலவி வந்தன. ஜுன் 11ஆம் திகதி 101 பேர் உயிரிழந்துள்ளனர் என வெளியிடப்பட்ட தகவலால் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.
இதனையடுத்து தொற்று உயிரிழப் புத் தொடர்பான தகவல் வெளியீடு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
கடந்த 24 மணி நேரத்தில் கொரோ னாத் தொற்றால் உயிரிழப்பவர்கள் தொடர்பான விவரங்களே தற்போது வெளியிடப்படுகின்றன.
மேலும், அரச தகவல்கள் திணைக் களம் கொரோனாத் தொற்று தொடர் பான உயிரிழப்புத் தொடர்பில் விரி வான தகவல்களை வெளியிட்டி ருந்தது.
சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு உயிரிழப்புத் தொடர் பான தகவல் வெளியிடுகையில் திருத்தம் மேற்கொண்ட பின்னர் சுருக்கமான தகவல்களே அரச தக வல் திணைக்களத்தால் வெளியிடப் படுகின்றது.
'சுகாதார அமைச்சு வழங்கும் தக வல்களை மாத்திரமே அரச தகவல் கள் திணைக்களம் வெளியிடுகின் றது. அவர்களின் தகவல்களில் நாம் எந்த உட்புகுத்தல்களையோ, மறைப்பையோ செய்யவில்லை' என்று அரச தகவல் திணைக்க ளத்தின் பணிப்பாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார். (ஒ.5.இ)

## 1500 மெட்ரிக் தொன் பிளாஸ்ரிக் துகள்கள் இதுவரை அகற்றல்

கொழும்பு, ஜுன் 21
பேர்ள் கப்பல் விபத்தால் கரை ஒதுங் கிய பிளாஸ்டிக் துகள்கள் சுமார் ஆயி ரத்து 500 மெட்ரிக் தொன் இதுவரை யில் அகற்றப்பட்டுள்ளது என கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை யின் தலைவர் லஹந்தபுர தெரிவித் தார்.
முப்படையினர் 12 ஆயிரம் பேர் இந் தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பிளாஸ் டிக் துகள்களை அகற்றுவது மிகக் கடினமான முயற்சி. கனரக இயந்திரங் களைப் பயன்படுத்தி இவற்றை அகற்ற முடியாது. சில இடங்களில் கைகளால் தான் இவை அகற்றப்படுகின்றன. மணலில் கலந்துள்ள இவற்றைப் பிரித்தெடுத்து அகற்றுவது என்பது பெரும் சவாலானது என்று அவர் குறிப்பிட்டார். (ஒ.5.இ)



# எரிபொருள் விலைக்குறைப்பு: பேச்சுக்கு இப்போது இடமேயில்லை

அமைச்சர் கம்மன்பில திட்டவட்டம்

கொழும்பு, ஜுன் 21
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாப னம் பெற்றுள்ள கடன்கள் மற்றும் அந் நியச் செலவாணி இன்னமும் 3 மாதங் களுக்கு மாத்திரமே போதுமான நிலை யில் எரிபொருள் விலைக்குறைப்பு என்பது இப்போதைக்குச் சாத்திய மில்லை. இவ்வாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து 21 மாதங்களின் பின்னரே நாம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளோம். இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனம் 3 பில்லி யன் டொலர் கடன்களைப் பெற்றுள் ளது. மேலும், பெற்றோலியக் கூட்டுத்தா பனத்துக்கு முதல் ஆறு மாதங்களில் 57 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள் ளது. இவை எல்லாவற்றையும் கருத்தி லெடுத்தே, ஜனாதிபதி மற்றும் பிரத மரை உள்ளடக்கிய குழுக்கூட்டத்தில் தொடர்பான அமைச்சரவை உப குழு எரிபொருள் விலையை உயர்த்த அனு மதித்தது.
அந்நியச் செலவாணி கையிருப்பு இன் னமும் 3 மாதங்களுக்கே போதுமா னது. அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்வதற்கு அந்நியச் செல வாணியை மீதப்படுத்த வேண்டும். எரிபொருள் இறக்குமதிக்காக மாதாந் தம் 300 மில்லியன் டொலர் செலவு செய்யப்படுகின்றது. அதனைக் கட்டுப் படுத்துவதற்காகவும் எரிபொருள் விலை யில் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டது, என்றார். (ஒ.5.இ)

## தென்னை மரங்களை வெட்டுவதற்குத் தடை

வெளியானது வர்த்தமானி

கொழும்பு, ஜுன் 21
தென்னை மரங்களை வெட்டுவதா யின், இனிவரும் நாள்களில் கிராம சேவகர் அல்லது பிரதேச செயலரிடம் அனுமதிபெற்றுக்கொள்ள வேண் டும் என்ற நிபந்தனைகளுடன் வர்த் தமானி வெளியிடப்பட்டுள்ளது.
மரங்கள் வெட்டுவதைக் கட்டுப்படுத் தும் சட்டத்தின் கீழ் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. பலா, பனை, போன்ற மரங்களை வெட்டுவதற்கு இதுவரை விதிக்கப்பட்ட தடை வரிசை யில் தென்னை மரமும் இணைக்கப் பட்டுள்ளது.
அனுமதி இன்றி தென்னை மரம் வெட்டுவதைத் தடைசெய்யும் வகை யில் இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்துக்குள் தனியார் போக்குவரத்து

## மன்னார் மாவட்ட சங்கத் தலைவர் தெரிவிப்பு

**மன்னார், ஜூன் 21**

**பயணத்தடை இன்று நீக்கப்படும் நிலையில், வடக்கு மாகாணத்துக்குள்ளான தனியார் போக்குவரத்துச் சேவைகள் உரிய சுகாதார நடைமுறைகளுடன் நடைபெறும்.**

இவ்வாறு மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் இருந்து வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களான வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு இடையில் போக்குவரத்து நடைபெறும். வடக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களுக்கு இடையில் சேவைகள் இடம்பெறாது. மக்கள் போக்குவரத்து சேவையை பெற்றுக்கொள்ளும்போது உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கொள்ள வேண்டும். - என்றார். (கு-56)

# மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

## கடற்றொழில் இணையம் சுட்டிக்காட்டு

தலைமன்னார், ஜூன் 21

மன்னாரில் ஏற்பட்ட புரேவி சூறாளியால் பாதிப்படைந்த மீனவர்களுக்கு இன்னும் விமோசனம் கிடைக்காத நிலையில், எரிபொருள் விலையேற்றம் மற்றும் தற்பொழுது கடலில் மூழ்கிய கப்பலிலிருந்து சில பொருள்களால் மீன்கள் இறந்து கரையொதுங்குகின்றமை என்பவற்றால், பிடிக்கப்படும் மீன்களை வாங்கி உண்பதில் மக்கள் அச்சமடைந்துள்ளனர். அதனால், மன்னார் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது- இவ்வாறு தெரிவித்தார். வடக்கு மாகாண கற்றொழில் இணையத்தின் மன்னார் மாவட்டத் தலைவரும் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலருமான முகமட் ஆலம்.

அவர் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்,

மேற்குறித்த சிக்கல்களால், மன்னார் மாவட்ட மீனவர்கள் மட்டுமன்றி, இலங்கை வாழ் அனைத்து மீனவர்களும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

தென்கடல் பிராந்தியத்திலுள்ள மீன் இனங்கள் அழிவடைந்து மன்னார் கடற்கரையோரங்களிலும் கரை ஒதுங்கும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

கப்பல் கடலில் மூழ்கியுள்ளமையால், எத்தனை ஆண்டுகள் கடல் வளம் அழிவு நோக்கி செல்லப்போகின்றது என்ற கேள்வி ஒவ்வொரு மீனவர்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

கடல் உணவு உண்ணும் மக்களும் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் மக்களும் எவ்வளவு தூரம் பெரும் பயங்கரமான பாதிப்புகளுக்கு உள்ளாகப் போகின்றார்கள் என்பது ஆய்வின் பின் தெரியவரப்போகின்றது. ஆனால் அரசு இன்னும் மெத்தனப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது - என்றார் (கு-60)

# வெடிக்காத குண்டு எழுதுமட்டுவாழில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

கொடிகாமம் எழுதுமட்டுவாழ் பகுதியில் வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டு ஒன்று நேற்று கண்டறியப்பட்டது. காணி ஒன்றைத் துப்புரவு செய்யும்போது குறித்த குண்டு இனங்காணப்பட்டது.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அதை அகற்றும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (கு-20)





## ஒரே நாளில் பிறந்ததினம்:

# மன்னார் மாணவிக்கு ஜனாதிபதியின் பரிசு

தலைமன்னார், ஜூன் 21

20ஆம் திகதியான நேற்று, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பிறந்தநாளாகும். இதே தினத்தில், மன்னாரைச் சேர்ந்த ஒரு மாணவிக்கும் பிறந்தநாள் என்பதால், அந்த மாணவிக்கு பிறந்தநாள் பரிசு வழங்கப்பட்டது.

ஜனாதிபதி குறித்த பரிசை அனுப்பிவைத்தார் என்றுகூறி, மன்னார் தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி சீ.பி.ஜெயதிலக மாணவியின் இல்லத்தில் வைத்து அதனை வழங்கினார். (கு-60)

# 5,000 ரூபா வழங்காது ஏமாற்றுகின்றது அரசு

## செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், ஜூன் 21

நாட்டில் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அரசு உரிய முறையில் வழங்காது பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றி வருகின்றது" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சுமத்தியுள்ளார்.

பிரித்தானியாவில் வாழ்கின்ற யோகன் விஸ்வநாதனின் நிதியில், வன்னியில் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கும் நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற மக்கள் இலங்கை அரசிடம் கையேந்தக் கூடாது என்பதற்காக புலம் பெயர்ந்த உறவுகள் பெரும் உதவிகளை செய்து வருகின்றனர்.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நாட்டில் பயணத் தடை ஏற்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சமுர்த்தி பெற்றுக்கொள்ளும் குடும்பங்களுக்கும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அரசு கூறியிருந்தது. ஆனால் சமுர்த்தி பெற்றுக்கொள்ளுகின்றவர்களுக்கு மாத்திரமே குறித்த 5 ஆயிரம் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது.

ஏனைய பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களை அரசு ஏமாற்றியுள்ளது. அன்றாட கூலித் தொழிலை மேற்கொள்ளும் குடும்பங்கள் பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்துள்ளன- என்றார். (கு-56)

# ஹெரோய்னுடன் தருமபுரத்தில் இருவர் கைது

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் பகுதியில், 60 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் பைக்கற்றுக்கள் மீட்கப்பட்டன. அவற்றை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார்சைக்கிள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின்படி, சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய குறித்த இருவரையும் பொலிஸார் சோதனையிட்டபோதே போதைப் பொருள் பைக்கற்றுக்களாக இருந்தமை தெரியவந்தது.

அவர்கள் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (கு-113)



# நெல் உலரவிடும் தளம் நயினாமடுவில் அமைக்கவும்

## நெற்செய்கையாளர்கள் கோரிக்கை

வவுனியா, ஜூன் 21

வவுனியா வடக்கு நயினாமடு கிராமத்தில் நெல் உலரவிடும் தளம் இன்மையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றோம் என்று நெற்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.


குறித்த பகுதியில் 150 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. எனினும், நெல் உலரவிடும் தளம் இன்மையால் பிரதான வீதியில் நெல் உலர்த்தும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

வீதியில் நெல் உலர்த்துவதால் குறித்த வீதியைப் பயன்படுத்தும் வாகன சாரதிகளும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் அதிக காற்று வீசுவதால் நெல் வீண்விரயமாகின்றது என்றும் நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த பகுதியில் நெல் உலரவிடும் தளம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கைவிடுக்கின்றனர். (கு-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற மாவட்ட மீனவர்கள் பருத்தித்துறையில் கைது



**யாழ்ப்பாணம், ஜூன் 21**

**யாழ்ப்பாணம் பருத்தித்துறை கடற்பரப்பில் அனுமதிப் பத்திரமின்றி கடலட்டை தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் வெளிமாவட்ட மீனவர்கள் 12 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

கடற்படையினர் நேற்று நடத்திய இந்த கைது நடவடிக்கையில் தொழிலுக்குப் பயன்படுத்திய 4 படகுகளும் அவற்றின் வெளியிணைப்பு இயந்திரங்களும் 500க்கும் மேற்பட்ட கலட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. மன்னார் மற்றும் புத்தளம் மீனவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை என்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (த-26)

## ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தலென பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

### இலுப்பைக்கடவையில் சம்பவம்

மன்னார், ஜூன் 21

பாதுகாப்பற்ற மீன் மற்றும் அட்டைப் பண்ணை தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலுப்பைக்கடவை மீனவ சங்கத் தலைவர் மற்றும் பண்ணை உரிமையாளர் ஆகியோருக்கு எதிராக, இலுப்பைக்கடவை பொலிஸில் இவ்வாறு முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாந்தை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட இலுப்பைக்கடவைப் பகுதியில் மக்கள் குடியிருப்பில் அமைக்கப்பட்டு உரிய பாதுகாப்பு மற்றும் பாரம்பரிப்பு இன்றி நண்டு, அட்டை, மற்றும் மீன் ஆகிய பண்ணைகள் காணப்படுகின்றன என்று மக்கள் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், அது தொடர்பில் அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளரை அச்சுறுத்தும் விதமாக மீனவ சங்கத் தலைவர் மற்றும் அட்டைப் பண்ணையின் உரிமையாளர் ஆகியோர் நடந்துகொண்டுள்ளனர். ஊடகவியலாளரை அச்சுறுத்திய அவர்கள் கமெராவில் பதிவான ஆதாரங்களை அழிக்கமுற்பட்டுள்ளனர். மேலும் தீங்கு விளைவிக்கும் அட்டை மற்றும் மீன் பண்ணை தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்திய இளைஞர் ஒருவர்மீதும் அவர்கள் தாக்குதல் முயற்சியை மேற்கொண்டனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ப-213)

## நாவற்குழி வீட்டுத் திட்டத்தில் சிங்களவர்களிடையே தகராறு

### நொருக்கப்பட்டது யன்னல் கண்ணாடி

கொடிகாமம் ஜூன் 21



நாவற்குழி பெரும் பான்மையின வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கும் ஒருவருடைய வீட்டுக் கண்ணாடி நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அங்கு குடியிருக்கும் வேறொரு நபரால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

நாவற்குழியில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வீட்டுத்திட்டப் பகுதியில் குடியிருக்கும் உறவுகளுக்கிடையே ஏற்பட்ட தகராறில் அங்கு குடியிருக்கும் ஒருவரின் வீட்டினுள் நேற்று அதிகாலை உள்நுழைந்த நபர் ஒருவர் வீட்டுக் கண்ணாடியை அடித்து உடைத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-159)

## வவுனியா வாசியைக் காணவில்லை அவரது மோ.சைக்கிள் யாழில் மீட்பு

வவுனியா, ஜூன் 21



வவுனியா கோவில்குளம் பகுதியில் வசிக்கும் முதியவர் ஒருவரை காணவில்லை என அவரது குடும்பத்தினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அவர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் 66 வயதான அன்ரன் விஜயகுமார் என்பவரே காணாமல் போயுள்ளார். சுகவீன மடைந்திருந்த அந்த முதியவர், வீட்டிலிருந்து வவுனியா மருத்துவமனைக்கு செல்கின்றேன் என தெரிவித்து சென்றுள்ளார். எனினும் பலநாள்களாகியும் அவர் வீடு திரும்பவில்லை. அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் யாழ். நல்லூர் பகுதியிலிருந்து மீட்கப்பட்டிருந்தது.

குறித்த விடயம் தொடர்பாக அவரது குடும்பத்தினரால் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவர் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் 0778934366, 0779588590 ஆகிய அலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-110)

## கிளி. இந்துக் கல்லூரியில் கைவரிசை காட்டிய திருடர்கள்

கொடிகாமம், ஜூன் 21

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் தொழில் நுட்பபீடம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் ஆகியவை உடைக்கப்பட்டு பல லட்சம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டதுடன் மேலும் பல பொருள்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ப-159)



## யாழ். பல்கலையில் நுண்நிதி தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி இணையவழியில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தால் நடத்தப்படுகின்ற நுண்நிதி தகைமைக் கற்கை நெறியின் நான்காம் அணியின் அறிமுக நிகழ்வு நேற்றுமுன்தினம் இணைய வழியாக நிகழ்நிலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு திருநெல்வேலி, பால் பண்ணை வீதியில் அமைந்துள்ள வணிக முகாமைத்துவபீடத்தில், அதன் பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் இடம் பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, கற்கை நெறி இணைப்பாளரான சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தர்ஷிகா பிரதீஸ், துறைத் தலைவர்கள் மற்றும் நிதி முகாமைத்துவத்துறை விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப)

# தரமற்ற உள்ளீடுகளை பயன்படுத்தி கிளிநொச்சியில் வீதிகள் சீரமைப்பு

## பூநகரி பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 21



பூநகரியின் பல்லவராயன்கட்டு சந்தியில் இருந்து வேரவில்நோக்கி சீரமைக்கப்படுகின்ற வீதி களுக்கு தரமற்ற உள்ளீடுகள் பயன்படுத்தப்படுகின்றன என்று பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் சி. சிறிரஞ்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆசிய அபிவிருத்தி வங்கி வேலைத் திட்டத்தில் அக்கராயனில் இருந்து பல்லவராயன்கட்டு வேரவில் வரையான வீதி தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றது. இவ் வீதியில் அமைக்கப்படும் பாலங்கள், மதகுகளுக்கு சல்லிக் கல்லில் இருந்து பெறப்படுகின்ற தூசியைப் பயன்படுத்தி பாலங்கள், மதகுகளுக்கான வேலைகள் இடம்பெறுகின்றன என்று மக்களால் எனக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

இது ஒரு பொருத்தமற்ற வேலைத் திட்டமாகும். எமது சூழலில் உள்ள ஆற்றுப்படுகைகளில் இருந்து வெளியிடங்களுக்கு மணல் கொண்டுசெல்லப்படும் நிலையில் எமது வளம் எமது வீதிகளுக்குப் பயன்படுத்தாமல் வீதிச் சீரமைப்புகளில் தரமற்ற உள்ளீடுகளைப் பயன்படுத்தி, தரமற்ற வேலைகளை மேற்கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாது. இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்களை முட்டாள்களாக்காதீர்!

இலங்கையில் கொரோனாத் தொற்று நிலைமை ஆபத்தான கட்டத்தில் உள்ளது என்று சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ள நிலையில், அரசு பயணத்தடையை நீக்கும் முடிவை எடுத்திருக்கின்றது. அரசின் இந்த முடிவு பல விமர்சனங்களை தோற்றுவித்துள்ள அதேநேரம், பயணத்தடையை நீக்கும் தீர்மானத்துக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்வைத்துள்ள காரணம் தான் அனைவரையும் ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

பயணத்தடையை ஒருவாரத்துக்கு முன்னதாகவே நீக்கி யிருக்க முடியும் என்றும், பயணத்தடையை நீடிக்கும் முடிவுக்கு வந்தமைக்கு தனக்கு வழங்கப்பட்ட தவறான தரவுகளே காரணம் என்றும் கூறியிருக்கிறார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

ஜூன் மாதம் 11ஆம் திகதி 101 கொரோனா உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருந்தன என்று தனக்குத் தரப்பட்ட தரவுகளே, பயணத்தடையை இன்றுவரை நீடிக்கக் காரணமாயிற்று என்று கூறியுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, புலனாய்வுத் துறையினரையும், சுகாதாரத்துறையினரையும் கொண்டு நடத்திய விசாரணையில், அன்றையதினம் 15 பேரே கொரோனாத் தொற்றால் உயிரிழந்திருந்தனர் என்று தனது 'கெட்டித்தனத்தையும்' வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதி சுட்டிக்காட்டும் அன்றையதினம் கொரோனா உயிரிழப்புக்கள் தொடர்பாக வெளியான அறிவித்தலில், உயிரிழப்புக்கள் திகதி வாரியாகவே குறிப்பிடப்பட்டிருந்தன. அன்று அறிவிக்கப்பட்ட 101 உயிரிழப்புக்கள் அன்றைய தினத்தில் மட்டும் நடந்தவை அல்ல என்பது சிறு பிள்ளைக்கும் தெரிந்திருக்கும் நிலையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு புரியாமல்விட்டது பெரும் புதிராகவே இருக்கின்றது.

ஜனாதிபதியின் கூற்றுப்படி, தவறான தரவுகளே அவருக்கு வழங்கப்பட்டன என்று வைத்துக்கொண்டாலும் அதிலும் பல கேள்விகள் இருக்கின்றன. கொரோனாத் தொற்றாளர்கள், கொரோனா மரணங்கள் தொடர்பான விடயங்களை இராணுவத் தளபதியின் தலைமையிலான தேசிய கொவிட் தடுப்புச் செயலணியே கையாண்டுவரும் நிலையில், ஜனாதிபதிக்கு தவறான தரவுகளை வழங்கியது யார்?, ஒரு வாரம் நாட்டை முடக்கி பொருளாதார இழப்புகளுக்குக் காரணமாகியிருந்த இந்தச் செயலையைச் செய்தவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என்பவற்றை ஜனாதிபதி தனது விளக்கத்தில் மென்று விழுங்கியிருக்கிறார்.

மறுபுறத்தில், தற்போதைய அரசின் நிர்வாகத்திறன் இன்மையை வெளிகாட்டும் ஓர் விடயமாகவே இதைக் கருத வேண்டியிருக்கின்றது. நாட்டின் மிகப் பெரும் பொறுப்பில் இருக்கும் ஜனாதிபதிக்கே இவ்வாறான ஒரு நிலைமை என்றால், நாட்டின் சாதாரண குடிமகனின் நிலைமை எவ்வாறு இருக்கும் என்பதையும் ஆராய வேண்டியிருக்கின்றது. அரசு எடுக்கும் முடிவுகளில் சந்தேகம் கொள்ள வேண்டிய நிலைமைக்கே குடிமக்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

ஒரு நாட்டில் பெரும் பொறுப்பில் இருப்பவர், நாடு தொடர்பாக எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்துக்கு, இவ்வாறான மிகச் சாதாரண காரணம் ஒன்றைக் கூறி தனது பொறுப்பில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத்தடையை நீக்கும் தீர்மானம் கூட சரியான தரவுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது. ஏனெனில் துறைசார்ந்த சுகாதார நிபுணர்களின் கருத்துக்கள், அரசின் தீர்மானத்துக்கு எதிர்த் திசையிலேயே உள்ளன.

மீட்பர்கள் என்ற விம்பத்துடன் களமிறங்கி, தெற்கு மக்களின் வாக்குகளைச் சுவீகரித்து ஆட்சிக்கு வந்தவர்கள், அந்த விம்பம் உடையும்போது தப்பித்துக்கொள்ள அடுத்தவர்களின் தலையை உருட்டித் தப்பித்துக்கொள்வது ஏற்புடைய செயலில்லை. ஆட்சி, அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக எடுக்கும் முடிவுகளுக்கு சப்பைக்கட்டு கட்டுவதை விளங்கிக்கொள்ள முடியாத அளவு நாட்டு மக்களும் முட்டாள்கள் இல்லை.

மக்களை முட்டாளாக்கும் வகையில் செயற்படாது, நாட்டு மக்களின் நலன்களை முன்னிறுத்திச் செயற்படுவதற்கு அதிகாரத்தில் உள்ளோர் முயல வேண்டும். தங்களுக்கு அதிகாரம் தந்த மக்களின் நம்பிக்கையைக் காப்பாற்ற முயல வேண்டும். இல்லாவிட்டால் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.




# பல நிபந்தனைகளுடனேயே பயணக் கட்டுப்பாடு நீக்கம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 21**

**இதுவரை நடைமுறையிலிருந்த பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டாலும், பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதும், மக்கள் அதற்கேற்ப செயற்பட வேண்டும். அலுவலகங்களுக்கு குறைந்தபட்ச ஊழியர்களையே வரவழைக்க முடியும்.

வீட்டிலிருந்து வேலை செய்யக்கூடியவர்களை அவ்வாறே சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.

பொதுப் போக்குவரத்தில், பயணிகளை இருக்கைகளின் எண்ணிக்கையில் மட்டுமே அழைத்துச்செல்ல வேண்டும். ஒவ்வொரு நபரும் முகக்கவசம் அணிவது கட்டாயமாகும்.

தனிமைப்படுத்தல் சட்டங்களை உரிய முறையில் பின்பற்ற வேண்டும்.

மாகாணங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்படமாட்டாது. அதனடிப்படையில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காக மட்டுமே மாகாணங்கள் இடையே பயணிக்க முடியும்.

உல்லாசப் பயணங்கள் மற்றும் யாத்திரை செல்ல அனுமதி இல்லை. பொது இடங்களில் கூட்டமாக இருக்கக்கூடாது - என்றார். (எ-4)



# பொலிஸாரால் அநீதியெனில் அதிகாரியிடம் முறையிடலாம்

கொழும்பு, ஜூன் 21

பொலிஸாரால் ஏதேனும் அநீதிகள் இடம்பெறுமாயின், அது தொடர்பாக பிரதேச உயர் பொலிஸ் அதிகாரிகளிடம், முறையிட முடியும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொலிஸ் கட்டளைப் பிரிவின் 0112 85 48 80 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்க முடியும் தகவல் வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# கட்டுப்பாட்டை நீக்க வேண்டாம்

## ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஜூன் 21

நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டாம் என்ற கோரிக்கையுடன், இலங்கை மருத்துவ சங்கம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

மிகவும் முக்கியமான இந்தத் தருணத்தில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளைத் தொடர வேண்டும். சில நாள்களுக்கு போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை நீக்குவது, ஏப்ரல் மாதத்தில் காணப்பட்ட நிலைமையை நோக்கி நாட்டை இட்டுச்செல்லும்.

கடந்த மூன்று வாரங்களாக காணப்பட்ட போக்குவரத்துக் கட்டுப்பாடுகளால் கிடைத்த பலாபலன்களை இழக்க வேண்டிய நிலையேற்படும் என்று இலங்கை மருத்துவ சங்கம் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசியின் இரண்டு டோஸ்கள் செலுத்தியவர்களுக்கும் கொரோனா



**கொழும்பு, ஜூன் 21**

**கொரோனாத் தடுப்பூசிக்கான இரண்டு டோஸ்களை செலுத்திக் கொண்டவர்களில், சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

குருநாகல் மாநகர சபையின் பணியாளர்கள் சிலருக்கே இவ்வாறு தொற்று உறுதியாகியுள்ளது. கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களுக்கும் இவர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன.

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ள அரச பணியாளர்களுக்கு அஸ்ராஜெனகா தடுப்பூசி செலுத்தப்பட்ட நிலையில், மாநகர சபையின் சாரதி ஒருவருக்கு முதலில் தொற்று உறுதியாகியுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்பட்டவர்களில் எத்தனை பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது என்பது குறித்து கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது என்று நகரசபை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-4)

# நிவாரணம் வழங்குவது போன்று 'ஷூட்டிங்'

## கைதாகி பிணையில் விடுவிப்பு

திருமலை, ஜூன் 21

நிவாரணம் வழங்குவதைப் போன்ற காணொலியைப் பதிவு செய்து டிக்டொக்கில் வெளியிட்ட நபர் சர்ச்சைக்குள்ளாகியுள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியுடன் தொடர்புடைய பேஸ்புக் பிரபலம் ஒருவரே இவ்வாறு சர்ச்சைக்குள்ளாகியுள்ளார்.

அவர் அண்மையில் டிக்ரொக்கில் ஒரு வீடியோ வெளியிட்டிருந்தார். அதில் பாகுபலி படத்தில் வந்த பாடலொன்றில் இடம்பெற்ற, "யாரு இவன்? யாரு இவன்? கல்லைத் தூக்கிப் போறானே, புள்ள போல தோளு மேல உன்னைத் தூக்கிப் போறானே" என்ற வரிகளைச் சேர்த்து, அதில் தனது தோளில் பொருள்களை அடுக்கி, நிவாரணம் வழங்கச் செல்பவரைப் போன்று இடம்பெறும் காணொலிகளை வெளியிட்டிருந்தார்.

எனினும், அந்தக் காணொலி நிவாரணப் பணியின் போது எடுக்கவில்லை, தனி சூட்டிங் மூலம் எடுக்கப்பட்டது என்று சிசிரிவி காணொலி வெளியாகியுள்ளது.

காரில் இருந்து நிவாரணப் பொருள்களை அவர் எடுத்து, தோளில் அடுக்கி நடந்து வர ஒருவர் வீடியோ எடுப்பதும், பின்னர் அதை ரிக்ரொக்கில் வெளியிட்டதும் அதில் பதிவாகியுள்ளது.

இந்தக் காட்சியை உப்புவேலி பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டிருந்தார். அவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் எல்லைக் கல்லில் மோதுண்டு சாவு

கொழும்பு, ஜூன் 21

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் லிந்துலை நகரை அண்மித்த பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். நானுஓயா சமர்செட் பகுதியைச் சேர்ந்த விஜயசுந்தரம் (வயது - 43) என்பவரே மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை பகுதியிலிந்து நானுஓயா நோக்கி பயணித்தபோது அவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்து அவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் எல்லை நிர்ணய கல்லில் மோதியுள்ளது.

இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் இருந்து அவர் தூக்கி எறியப்பட்டுள்ளார்.

இதன்போது வீதிக்கு அருகாமையில் இருந்த காட்கல் எனப்படுகின்ற எல்லை நிர்ணயக் கல்லில் தலைபட்டுள்ளது. அவர் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி எறியப்படும்போது தலைக்கவசமும் கழன்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (து-இ)


# பொருளாதார மத்திய நிலையங்கள் இன்று தொடக்கம் இயங்கவுள்ளன

கொழும்பு, ஜூன் 21

பொருளாதார மத்திய நிலையங்கள் இன்று திங்கட்கிழமை தொடக்கம் திறக்கப்படவுள்ளன.

இதனடிப்படையில் தம்புள்ளை, தம்புத்தேகம, நாரஹேன்பிட்ட, கெப்பிட்டிபொல மற்றும் இரத்மலானை ஆகிய இடங்களில் பொருளாதார மத்திய நிலையங்கள் சுகாதார வழிகாட்டல்களுடன் திறக்கப்ப டவுள்ளன.

அத்தோடு, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய வர்த்தக நடவடிக்கைளும் இடம்பெறவுள்ளன. நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணத் தடை இன்று அதிகாலை 4 மணியுடன் தளர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-இ)



# மேலும் 3 ஆமைகள் இறந்து ஒதுங்கின

கொழும்பு, ஜூன் 21

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்தால் ஏற்பட்ட இரசாயனக் கசிவு காரணமாக, அம்பாறை மாவட்டத்தில் மேலும் சில கடல் ஆமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

அதன்படி அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை பகுதியில் நேற்றுமுன்தினம் மூன்று கடல் ஆமைகள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன.

கடந்த மாதம் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தையடுத்து இதுவரை 40க்கும் மேற்பட்ட ஆமைகளும் குறைந்தது 5 டொல்பின்களும் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (து-இ)

# பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 21

பல்கலைக்கழக அனுமதிக்காக இதுவரையில் விண்ணப்பிக்காத மாணவர்கள், தமது விண்ணப்பங்களை அனுப்புவதற்கான காலத்தை நீடிக்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.


நாட்டில் நடைமுறையிலுள்ள நடமாட்டத் தடையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய தினங்களில் மாணவர்கள் விண்ணப்பங்களை அனுப்ப முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனை மேலும் சில பொருள்களுக்குத் தடை

கொழும்பு, ஜூன் 21

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருள்களுக்கான பாவனைத் தடைப்பட்டியலில், மேலும் சில பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அழிந்துபோகும் மாற்று வழிகளைப் பயன்படுத்தினாலும், இந்த பட்டியலில் உள்ள பெரும்பான்மையான பிளாஸ்டிக் பொருள்கள் சுற்றுச்சூழலுக்கு ஆபத்தாக உள்ளன என்று சுற்றுச்சூழல் அமைச்சர்



மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக தடைசெய்யப்பட வேண்டிய பட்டியலில், சட்டைக் கிளிப்புகள், பிளாஸ்டிக் கரண்டி, முள்கரண்டி, கத்திகள், உணவுக் கப்கள், தயிர் மற்றும் ஐஸ்கிரீம் கரண்டி, உணவுப் பொதிகள் மற்றும் கோப்பைகள், பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் சுவரொட்டிகள், பதாதைகள் மற்றும் பல்வேறு வகையான விளம்பரங்கள், 400-500 மி.மீ வரை உள்ள பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட சிறிய பைகள் மற்றும் மளிகைப்பைகள் ஆகியவையே இணைக்கப்பட்டுள்ளன. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றுக்குள்ளான குழந்தைகளுக்கு புதிய நோய்

## 6 குழந்தைகள் இதுவரை மருத்துவமனையில் சேர்ப்பு

கொழும்பு, ஜூன் 21

குழந்தைகளில் ஒரு வகையான அழற்சி நோய் பரவி வருகிறது என மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். பெற்றோர்கள் தங்கள் குழந்தை களை அவதானமாக கவனித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த புதிய நோய்க்குறி முதன் முதலில் இங்கிலாந்தில் 2020 ஆம் ஆண்டில் பதிவாகியது என லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை மருத்துவ நிபுணர் நலின் கிதுல்வட்டா தெரிவித்தார்.

இந்த புதிய நோய்க்குறி கொரோனாத் தொற்றுடன் தொடர்புடையது. கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட இரண்டு முதல் ஆறு வாரங்களுக்குப் பிறகு குழந்தைகள் இந்த நோயால் பாதிக்கப்படலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு காய்ச்சல், வயிற்று வலி, கூடுதல் சோர்வு, வாந்தி, வயிற்றுப்போக்கு மற்றும் தோல் சொறி போன்ற அறிகுறிகள் உருவாகலாம் என்று அவர் கூறினார்.

இது குருதி அழுத்தத்தைக் குறைப்பதன் மூலம் மேலும் கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும். இதனால் இதயத்தை பாதிக்கும். இந்த ஆபத்தான நோய் தொடர்பில் அவதானம் தேவை என்று கிதுல் வட்டா சுட்டிக்காட்டினார்.



லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஆறு குழந்தைகள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார். (ஒ,4)

# தந்தையின் வாள்வெட்டில் 6 மாதக் குழந்தை சாவு

## தந்தையர் தினத்தில் சோகம்

திருகோணமலை, ஜூன் 21

திருகோணமலை, கப்பற்றை பகுதியில் தந்தையின் வாள் வெட்டுக்கு இலக்கான 6 மாதங்களான குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. குடும்ப தகராறின் காரணமாக இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தையின் தாத்தா மற்றும் பாட்டி ஆகியோர் படுகாயமடைந்து திருகோணமலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சீனன்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சீனக்குடா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் தெரிவிக்கையில்;

குடும்பத் தகராறு காரணமாக நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்த மோதலில், தக் ஷன் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

இந்தக் குழந்தையின் தாத்தாவான பெர்னாண்டோ குமார்(வயது-47) மற்றும் பாட்டியாரான முத்துமாரி (வயது - 43) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர். வாள்வெட்டில், பாட்டியின் கை துண்டாடப்பட்டுள்ளது.

கப்பறுறை பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய லக்ஷிக்கா என்ற சிறுமி 21 வயதுடைய லன்ஷான் என்ற இளைஞனை திருமணம் செய்துள்ளார். லக் ஷிகாவுக்கு திருமணம் செய்வதற்கான வயது பூர்த்தியடையாததன் காரணமாக அவர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளனர்.

எனினும், அவர்களுக்கு 6 மாதமுடைய ஆண் குழந்தையொன்று உள்ளது. இந்தநிலையில், சம்பவ தினத்தன்று லக் ஷிகாவின் கணவர் அவரது வீட்டுக்கு வந்தபோது, குழந்தை அழுதுகொண்டிருப்பதால் அதற்கு பாலூட்டுமாறு தெரிவித்துள்ளார்.

எனினும் அதற்கு அவசியமில்லை என லக்ஷிகாவின் தந்தை கூறியமையால் கோபமடைந்த இளைஞன் அவரை வாளால் தாக்கியுள்ளார் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. இதன்போது லக்ஷிகாவின் தந்தையிடமிருந்த 6 மாத குழந்தை வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளது.

இளைஞன் வாளால் தாக்கியதை தடுக்க முயன்ற லக் ஷிகாவின் தாயாரின் கையையும் அவர் வெட்டியுள்ளார்.

இவ்வாறு வாள் வெட்டுக்கு இலக்கான குழந்தை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் சீனன்குடா பொலிஸார் தப்பிச் சென்றுள்ள சந்தேக நபரை தேடி வருகின்றனர் - என்றார். (த-இ)

# சிறுவர்களை தாக்கும் புழுநோய்

## மருத்துவர் எச்சரிக்கை



**கொழும்பு, ஜூன் 21**

**பூனை மற்றும் நாய்கள் மூலம் பரவும், டோக்ஸோகாரியாசிஸ் (toxocariasis) எனப்படும் புழு நோய், சிறுவர்களை விரைவாகத் தாக்கும் என்று சிறுவர்கள் தொடர்பான விசேட மருத்துவர் நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாட்டில் பயணக் கட்டுப்பாடு நடைமுறையிலுள்ளது. அத்துடன், பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. அதனால் வீடுகளில் முடங்கியுள்ள சிறுவர்கள் பூனைகள் மற்றும் நாய்க்குட்டிகளுடன் அதிக நேரம் செலவிடுகின்றனர்.

பூனைகள் மற்றும் நாய்க்குட்டிகள் போன்ற சிறிய விலங்குகளின் உடலில் இந்த புழு தோற்றம் பெறும். அவ்வாறான விலங்குகளுடன் தொடர்பைப் பேணும் சிறுவர்கள் தொற்றுக்கு உள்ளாவர். ஆரம்ப கட்டத்தில் அவர்களின் தோலில் புழுக்கள் தொற்றும்.

பின்னர் அந்தப் புழுக்கள் குழந்தைகளின் கண்கள், மூளை மற்றும் நுரையீரலுக்குள் நுழைந்து கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும்.

கடந்த சில நாள்களாக இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். வீட்டு வளர்ப்பு விலங்குகளுக்கு மருந்துகளைக் கொடுப்பதன் மூலம், இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (எ-4)

# 194 பணியாளர்களில் 128 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஜூன் 21

இரும்பு தய்யாரிப்பு நிறுவனமொன்றில் 194 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், 128 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

வத்தளை ஹேகித்த பகுதியில் அமைந்துள்ள பிரபல இரும்பு தயாரிப்பு தொழிற்சாலையிலே தொற்றாளர்கள் பலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து அந்தத் தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த இரும்பு தயாரிப்புத் தொழிற்சாலையில் அதிகளவானோர் இந்தியர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தொற்று உறுதியானவர்களில் சுமார் 92 பேர் இந்தியர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# நனோ தொழில்நுட்பத்தில் மற்றுமொரு பரிசோதனை

கொழும்பு, ஜூன் 21



கொரோனா வைரஸின் புதிய விகாரமான டெல்டா வைரஸ் இலங்கையில் பரவியுள்ளமை தொடர்பில் ஆராய்வதற்கு, மற்றொரு பரிசோதனைத் திட்டம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சிறிஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்புசக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பரிசோதனைக்காக இலங்கையில் இதுவரை பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்தை மாற்றி, நனோ தொழில்நுட்பம் முதல் முறையாக பயன்படுத்தப்படவுள்ளது.

நனோ தொழில்நுட்பம் முன்பு பயன்படுத்திய தொழில்நுட்பத்தை விட மிகவும் திறமையானது. இதற்குத் தேவையான உபகரணங்கள் இலங்கைக்கு அண்மையில் கொண்டுவரப்பட்டுள்ளன.

முந்தைய மரபணுப் பகுப்பாய்வு சோதனைகளின் போது, கொழும்பில் உள்ள தொமட்டகொட பகுதியில் ஆபத்தான டெல்டா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் ஆபத்தான சூழ்நிலை சுகாதாரத்துறைக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டமையால், அந்தப் பகுதியைத் தனிமைப்படுத்த, தேவையான சுகாதார நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளன- என்றார். (எ-4)

# கொரோனாத் தொற்றாளர்களின் விபரங்களில் முரண்பாடுகள்

## மருத்துவ நிபுணர்களும் சந்தேகம்

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான புள்ளிவிபரங்களில் காணப்படும் முரண்பாடுகள் தொடர்பில், மருத்துவ நிபுணர்களும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய தெரிவிக்கையில்,

வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களுக்குப் பின்னால் சதியொன்று உள்ளது.

புள்ளிவிபரங்கள் தரவுகளை தொற்றுநோயியல் பிரிவு வெளியிடவில்லை.

தொற்றுநோயியல் பிரிவு கண்காணிப்பு நோய்பரவலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் தடுப்பூசிகளை வழங்குதல் உள்ளிட்ட ஆறு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ளது.

எனினும் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்களில் ஏற்பட்ட தவறுகளுக்கு சதி முயற்சி காரணமாக இருக்கலாம் - என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவப்பாணி தண்டனை வழங்கிய

# சிப்பாய்கள் உடன் பணி இடைநிறுத்தம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

**ஏறாவூரில் பயணக் கட்டுப்பாட்டை மீறி வீதியில் நடமாடிய குற்றச்சாட்டில் பொதுமக்களுக்கு இராணுவப்பாணி தண்டனை வழங்கிய இராணுவத்தினர் கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.**



ஏறாவூரில் பயணக் கட்டுப்பாட்டை மீறி நடமாடினர் எனத் தெரிவித்து பொதுமக்கள் சிலர் இராணுவத்தினரால் வீதியில் முழங்காலிட்டு நிற்க வைக்கப்பட்டனர். அவர்கள் முழங்காலிட்டு கைகளை உயர்த்தியவாறு நின்ற ஒளிப்படம் ஊடகங்களில் வெளிவந்திருந்தது.

இதனையடுத்து மனித உரிமை ஆர்வலர்கள் பலரும் இராணுவத்தினரின் அத்துமீறிய செயற்பாட்டைக் கண்டித்திருந்தனர்.

இந்த நிலையில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, ஏறாவூரில் சட்டத்துக்குப் புறம்பான வகையில் பொதுமக்களுக்குத் தண்டனை வழங்கிய சிப்பாய்கள் உடன் பணி இடைநிறுத்தப்படுகின்றனர் என அறிவித்துள்ளார். அவர்கள் மீதான ஒழுக்காற்று விசாரணை முடிந்ததும், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ.இ)

---

## மக்களை முட்டுக்காலில் நிற்கவைத்த படையினர்

# நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் பயணிக்கிறது

### இம்ரான் மஹ்ரூப் எம்.பி குற்றச்சாட்டு

திருமலை, ஜூன் 21



ஏறாவூரில் பொதுமக்கள் வீதியில் முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட சம்பவம் நாடு சர்வாதிகாரத்தை நோக்கிப் போவதை எடுத்துக்காட்டுகின்றது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

ஏறாவூரில் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வீதிக்கு வந்த சில பொதுமக்கள் பாதுகாப்புக் கடமையில் இருந்தவர்களால் வீதியில் இருகைகளையும் உயர்த்தி முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் வெளிவந்துள்ளன. இந்த நாடு ஜனநாயக நாடு. சட்டவாட்சி அமுலில் உள்ள நாடு. எனவே, எல்லாவற்றையும் சட்டரீதியாகவே அணுகவேண்டும். அதுவும் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற அரசமைப்பு வாசகத்துக்கமைய எல்லோருக்கும் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். சட்டம் பாரபட்சமாக அமுல்படுத்தப்படக் கூடாது என்பதையே இந்த வாசகம் எடுத்துக்காட்டுகின்றது. ஏறாவூர் சம்பவம் சட்டத்துக்குப் புறம்பானது, மனிதாபிமானமற்றது. ஒவ்வொருவருக்கும் சுய கௌரவம் உள்ளது. வீதியில் முட்டுக்காலில் நிற்க வைக்கப்பட்ட இச்சம்பவம் அவர்களது சுயகௌரவத்தைக் கொச்சைப்படுத்துகின்றது.

பயணத்தடை அமுலில் உள்ளது என்று சொல்லப்பட்டாலும் நாடு முழுவதும் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் வீதிகளில் நடமாடுகின்றன. அதேபோல பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் வீதிகளில் பயணிப்பதை நாம் காண்கிறோம்.

இந்நிலையில் ஏறாவூரில் தமது அன்றாடத் தேவையை நிறைவேற்ற வந்த பொதுமக்களை மட்டும் வதைக்கின்ற செயல் நாட்டில் நியாயமான சட்டவாட்சி இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது. நாட்டில் நீதிமன்றக் கட்டமைப்பு மிகத் தெளிவாகச் செயற்படுகின்ற நிலையில் சட்டத்தை தமது கையில் எடுத்து தண்டனை வழங்கும் அதிகாரத்தை இந்த அரசு காவல் கடமைகளில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கியுள்ளமையையே இது எடுத்துக்காட்டுகின்றது. அரசின் பக்கச்சார்பான இந்த சர்வாதிகாரப் போக்கு குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் - என்றுள்ளது. (ப)

---

## பொஸ்பேட் பறிபோனதால் விமல் கவலை

கொழும்பு.ஜூன் 21

லங்கா பொஸ்பேட் நிறுவனம் வேறு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளமைக்கு, கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச கவலை வெளியிட்டுள்ளார்.

பல வருடங்களாக நஷ்டத்தில் இயங்கிய நிறுவனத்தை, இலாபம் பெறும் நிலைக்கு நானே மாற்றினேன் என்றும் அவர் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்சவின் கீழ் இருந்த லங்கா பொஸ்பேட் நிறுவனத்தை, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவின் கீழ் கொண்டுவரும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியால் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

---

# கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுத்தருக

## இந்தியா மற்றும் சர்வதேசத்தைக் கோரினார் கிழக்கு மாகாண முன்னாள் பிரதித் தவிசாளர்

கொழும்பு, ஜூன் 21

கொள்கை வகுப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்தி சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் மிக விரைவில் மாகாண சபை தேர்தல்களை நடத்தி அதற்கும் மேலாக தமிழ் மக்களுக்குரிய நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிழக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதித் தவிசாளரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதித் தலைவருமான இந்திரகுமார் பிரசன்னா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

13வது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த நாட்டின் அரசுகள் கபட நாடகம் ஆடிக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் இந்தியாவின் உயர்ஸ்தானிகர் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்த போது 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு பூரணமாக ஒத்துழைப்போம் என்று சொல்லியிருக்கின்றார். ஆனாலும், இந்தியா இந்த விடயத்தைச் சொல்லிக்கொண்டு மாத்திரம் இல்லாமல் முழுமையாகவும், விரைவாகவும் கையாள வேண்டும். தற்போதைய நிலையில் மாகாணசபையின் அதிகாரங்களைத் தன்வசப்படுத்தும் விடயங்களை மத்திய அரசு துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. மாகாணத்துக்குரிய பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக்குதல் என்ற பெயரிலும், மருத்துவமனைகளைத் தரமுயர்த்தல் என்ற பெயரிலும் மத்திய அரசின் கீழ் கையகப்படுத்தி அவற்றின் மீதுள்ள மாகாண அதிகாரங்களைக் குறைப்பதை விட அவற்றுக்கான நிதி ஒதுக்கங்களை அதிகரித்து அவற்றை அபிவிருத்தி செய்து மாகாண சபைகளின் கீழேயே தரமுள்ளனவாக இயங்கச்செய்ய முடியும். ஆனால் அரசு அவற்றைச் செய்யாமல் அபிவிருத்தி என்ற மாய வலையின் மூலம் மாகாண அதிகாரங்களைக் குறைக்கவே எண்ணுகின்றது.

எனவே இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்காக தங்கள் கொள்கை வகுப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்தி சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் மிக விரைவில் மாகாண சபைகளை நடத்தி அதற்கும் மேலாக தமிழ் மக்களுக்குரிய நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ப)

---


## விமலின் அமைச்சிலிருந்து பொஸ்பேட் கம்பனி நீக்கம்

கொழும்பு, ஜூன் 21

விமல் வீரவன்சவின் கைத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த லங்கா பொஸ்பேட் கம்பனி, தற்போது மஹிந்தானந்த அளுத்கமகேவின் விவசாய அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதற்கான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (எ-4)

---



## ரத்னாயக்கவுக்கு புதிய நியமனம்

இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராகக் கடமையாற்றிய, ஜெனரல் தயா ரத்னாயக்க, கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், துறைமுக அதிகாரசபையின் புதிய தலைவராக நிஹால் கெப்பற்றிபொல நியமிக்கப்பட்டுள்ளார். (எ-4)

---

# சட்டத்தை மீறியவர்களுக்கு முழந்தாளிடல் தண்டனையா?

## இழிவான செயலென கண்டனம்

கொழும்பு.ஜூன் 21

நாட்டில் நடைமுறையிலுள்ள பயணத் தடைச்சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டில், தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களை, முழந்தாளில் இருக்க வைத்த சம்பவம், இராணுவத்தின் இழிவான செயல் என்று முன்னாள் மனித உரிமை ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 11 ஆவது உறுப்புரை கொடுரமான, மனிதாபிமானமற்ற, இழிவான தண்டனையைத் தடைசெய்கின்றது. இந்த செயற்பாடானது சித்திரவதைக்கு எதிரான சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றமாக அமைகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் பயணத்தடையை மீறியவர்களுக்கு முழந்தாளில் இருத்தி இராணுவத்தினர் தண்டனை வழங்கினர் என்று ஊடகங்களில் ஒளிப்படங்கள் பகிரப்பட்டிருந்தன. (எ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விமான நிலைய விரிவாக்கம்


# மரங்களை இடம்பெயர்க்கும் புதிய திட்டம் அறிமுகம்

கொழும்பு, ஜூன் 21

**கட்டுநாயக்கா விமான நிலைய விரிவாக்கத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளின்போது வெட்டப்படவிருந்த 419 மரங்களைப் பாதுகாப்பதற்கு புதிய தொழில்நுட்பத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**



இந்த நடவடிக்கையின்போது 219 மரங்களை அதே இடத்தில் பாதுகாப்பதற்கும் 200 மரங்களை வேருடன் கிளப்பி புதியதோர் இடத்தில் நடுகை செய்வதற்கும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான மரங்களை வேருடன் கிளப்பி நடுகைசெய்யும் திட்டம் சிங்கப்பூரில் பிரபல்யமானது. வடக்கில் கடந்த காலங்களில் வீதி அபிவிருத்திப் பணிகளின்போது மிகப் பழமையான நூற்றுக்கணக்கான மரங்கள் வெட்டிச்சாய்க்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5.இ)



# முட்டையின் விலையும் விரைவில் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 21

அத்தியாவசியப் பொருட்களின் விலை நாளாந்தம் அதிகரித்து வரும் நிலையில், முட்டையின் விலையும் விரைவில் அதிகரிக்கப்படும் என்று இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையில், முட்டை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பானது, முட்டை விநியோகஸ்தர்களுக்கு நேரடிப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் மூடப்பட்டுள்ள வர்த்தக நிலையங்கள், மீண்டும் திறக்கப்படுமாயின் தேவையானளவு முட்டையை விநியோகிக்க முடியாது போகும்.

முட்டையை 21 நாள்கள் மட்டுமே பாதுகாப்பாக வைத்திருக்க முடியும். குறித்த காலப்பகுதியில் முட்டை விற்பனையும் இடம்பெறுவது அவசியமாகும்.

அவ்வாறில்லை எனில், ஏனைய செலவுகளைச் சமாளிப்பதற்கு முடியாமல் போகும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை உற்பத்திச் செலவு அதிகரிப்பால் கோழி இறைச்சியை கட்டுப்பாட்டு விலைக்கு வழங்க முடியாதுள்ளது என்று கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளனர். (எ-4)



# சேதனப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது காலத்தின் தேவை

*பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 21

ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவதற்கு சேதனப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவது காலத்தின் தேவையாகியுள்ளதுடன், அதற்கான முறையான வேலைத்திட்டமொன்றை ஏற்படுத்துவது முக்கியமாகும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சேதனப்பசளை மற்றும் சேதனப் பயிர்செய்கை தொடர்பில் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

விவசாயப் பெருமக்கள் மத்தியில் இது தொடர்பில் தவறான கருத்து ஏற்படுத்தப்பட்டுள்ளமையால் அவர்களுக்கு விழிப்பூட்டுவதற்கான முறையான வேலைத்திட்டமொன்று அவசியம். பாடசாலைகள் மற்றும் விகாரைகளை மையமாகக்கொண்டு சேதனப் பயிர்ச்செய்கைக்கு பிள்ளைகள் மற்றும் மக்களைப் பழக்கப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுடன் கலந்துரையாடி தீர்மானமொன்றுக்கு வரவேண்டும். சேதனப் பயிர்ச்செய்கையை நாட்டில் விரிவுபடுத்துவ தற்கான நிபுணர்களின் ஆதரவு பாராட்டத்தக்கது. சேதனப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஜனாதிபதியும் தெளிவான நிலைப்பாட்டில் உள்ளார்.

முறையான வேலைத்திட்டமொன்றின் மூலம் நாட்டில் ஆரோக்கியமான மக்களை உருவாக்குவதற்கு அனைவரதும் ஒத்துழைப்பும் அவசியம்- என்றார். (ப)

# சேதனைப்பசளை உற்பத்திக்கு 10,000 ரூபா

கொழும்பு, ஜூன் 21

சேதனைப் பசளை உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு, ஒரு ஹெக்ரேயருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் பெரும்போகத்துக்குத் தேவையான சேதனைப்பசளையை உற்பத்திசெய்து, விவசாயிகளுக்கு வழங்குவது தொடர்பான, கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சேதனைப்பசளை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (எ-4)



# சுமார் 200 நச்சுப்பொருள்கள் இலங்கைக்குள் வருகின்றன

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஜூன் 21

சுமார் 200 நச்சுப்பொருள்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்படுகின்றன. இதிலிருந்து நிதிச் சலுகைகள் மற்றும் பிற சலுகைகளைப் பெறும் நபர்கள் சேதனப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கு எதிராக பல்வேறு சதித்திட்டங்கள் தீட்டுகின்றனர் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் அனுருத்த பாதெனிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

60 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நாட்டின் பயிர்ச்செய்கை இரசாயனப் பாவனைக்கு பழக்கப்படுத்தப்பட்டுள்ளதால், மக்களின் ஆரோக்கியம் மோசமடைந்துள்ளது. பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்கள் காரணமாக, சேதனப் பயிர்ச்செய்கைக்கு உதவும் நுண்ணுயிர்கள் மற்றும் மண் நாசமாக்கப்பட்டுள்ளதுடன், நீர் மாசு மற்றும் சூழல் மாசம் அதிகரித்துள்ளன.

கணக்காய்வாளர் அறிக்கையின்படி சுமார் 200 நச்சுப் பொருள்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

இதிலிருந்து நிதிச்சலுகைகள் மற்றும் பிற சலுகைகளைப் பெறும் நபர்கள் சேதனப் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கு எதிராக பல்வேறு சதித்திட்டங்கள் தீட்டுகின்றனர்.

இரசாயன உரப்பாவனை காரணமாக விவசாயிகள் ஏழைகளாகியுள்ளனர். நாட்டில் இரசயானப்பாவனை மற்றும் விஷ உணவுப்பாவனை காரணமாக நாளொன்றுக்கு சுமார் 50 புற்று நோயாளர்கள் மரணிக்கின்றனர். சிறுநீரக நோயாளர்கள் மற்றும் புற்று நோயாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றனர். பிள்ளைகளுக்காக நீரிழிவுச் சிகிச்சை நிலையங்களை நடத்தும் நிலைக்கு தள்ளப்படுதல், குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைப்பாடு மற்றும் மாற்றுத் திறனாளிக் குழந்தைகள் பிறப்பு அதிகரிப்பு ஆகியவற்றுக்கும் இரசாயனப் பசளையே காரணமாக அமைந்துள்ளது - என்றார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏப். 21 தாக்குதல்

# சில சந்தேகநபர்களின் சொத்துக்கள் முடக்கம்

கொழும்பு, ஜூன் 21
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளின்போது, தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் சில நபர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வணாத்தவில்லு பிரதேசத்தில் 18 ஏக்கர் காணி, காத்தான்குடி ஒல்லிபுரம் பிரதேசத்தில் 25 ஏக்கர் காணி மற்றும் தெமட்டகொட பிரதேசத்தில் எட்டு பேர்ச் காணி என்பவையே முடக்கப்பட்டுள்ளன.
28 மில்லியன் ரூபா பெறுமதியான நிதி மற்றும் 8 லட்சம் டொலர்களுக்கும் அதிகமான நிதி மற்றும் 14 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று மாணிக்கக் கற்கள் உட்பட வாகனங்கள் ஆகியவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# போக்குவரத்து குற்றங்களுக்கு கடன் அட்டையூடாக தண்டம்



கொழும்பு, ஜூன் 21
**எதிர்காலத்தில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களுக்கான தண்டப் பணத்தை, அவர்களிடம் உள்ள கடன் அட்டை (கிரெடிட் காா்ட்) மூலம் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.**

சம்பந்தப்பட்ட இடத்தில் கடமையில் இருக்கும் பொலிஸாரால், தண்டப் பணத்தை கடன் அட்டை மூலம் வசூலிப்பதற்கான தரவை பெற்றுக்கொள்வதற்கான முறை அறிமுகப்படுத்தப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
பொலிஸ் தலைமையகத்தில் இது தொடர்பான இணையதள பணக் கொடுக்கல் வாங்கல் முறை உருவாக்கப்பட்டவுள்ளது.
வாகனம் சார்ந்த தவறுகளுக்காக சாரதிகளுக்கு புள்ளி வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். அந்த புள்ளி குறையும் போது, சில மாதங்களுக்கு அல்லது பல வருடங்களுக்கு வாகன அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-4)

# முதியோர் இல்லத்தில் தேரர் அடித்துக்கொலை

கொழும்பு, ஜூன் 21
முதியோர் இல்லம் ஒன்றில் தங்கியிருந்த தேரர் ஒருவர், அடித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.
பமுனுகம, உஸ்வெட்டகொய்யவா பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்ட முதியோர் இல்லத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
அங்கு தங்கியிருந்த 73 வயதுடைய ஜாஎல பகுதியைச் சேர்ந்த ஒருவரே, தேரரை அடித்துக் கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பமுனுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-4)



# மாட்டுவண்டியில் சென்றோருக்கு பிணை

கொழும்பு, ஜூன் 21
'தெங் செப்பத' இப்போது சுகமா? என்று எழுதப்பட்ட பாதாதையுடன் மாட்டு வண்டியில் பயணித்த, நால்வர் காலியில் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதைக் கண்டித்து இவர்கள் மாட்டு வண்டியில் சென்றுள்ளனர்.
கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் ஐக்கிய இளைஞர் சக்தியின் காலி மாவட்ட அமைப்பாளர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மாகொல்ல பாலத்தில் இருந்து காலி நகர் நோக்கிப் பயணித்த போதே, இவர்கள் பயணத்தடையை மீறினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.
எனினும் இவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

# உப பொலிஸ் பரிசோதகருக்கு தடுப்புக்காவல்

கொழும்பு, ஜூன் 21
ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகரை, விசாரணைகள் நிறைவடையும் வரை, தடுப்புக்காவலில் வைக்குமாறு காலி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சந்தேகநபரான உப பொலிஸ் பரிசோதகர் சீருடையில் இருந்தபோது, ஹெரோய்ன் போதைப்பொருளுடன் ஹிக்கடுவப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். கைதுசெய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகரிடமிருந்து 50 கிலோகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது.
களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட, உப பொலிஸ் பரிசோதகர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (எ-4)



# பிரிட்டனுடனான உறவை வலுப்படுத்த ஆராய்வு

கொழும்பு, ஜூன் 21
பிரிட்டனுடனான இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசு கவனம் செலுத்தியுள்ளது.
பிரிட்டனின் தெற்காசியா மற்றும் பொதுநலவாய விவகார அமைச்சர் தாரிக் அஹமட் பிரபுவுடன், அமைச்சர் தினேஷ் குணவர்தன இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.
'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இருதரப்பு உறவுகளை மேலும் வெளிப்படுத்துவது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. வர்த்தகம் முதலீடு, காலநிலை, மாற்றம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினரும் ஆராய்ந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)



# மாணவர்களுக்கு "ரப்"

கொழும்பு, ஜூன் 21
பாடசாலை மாணவர்களுக்கு இணைய வசதிகள் மற்றும் ரப்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.
கொரோனாத் தொற்றால் மாணவர்கள் ஒன்லைன் கல்வியை எளிதில் அணுகுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
அதற்கமைவாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இதற்கான அறிவிப்பு, சிரேஷ்ட அமைச்சர்களால் இன்று வெளியிடப்படும் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
ஒன்லைன் கல்வியில் சிரமப்படும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச இணையம் மற்றும் ரப்களை வழங்கும் திட்டம் தொடர்பில் அரசு கவனம் செலுத்திவருகின்றது என்று அமைச்சர் நாமல் ராஜபக்ச கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்துக்குள் ஊடுருவிய தமிழர்களிடம் விசாரணை

## அடைக்கலம் கொடுத்தவருக்கு வலைவீச்சு

**ராமநாதபுரம், ஜூன் 21**

**இலங்கையில் இருந்து படகில் சட்டவிரோதமாக கனடா செல்லும் நோக்கில் தமிழகத்துக்குள் ஊடுருவிய இலங்கைத் தமிழர்கள் மங்களூர் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டிருக்கும் நிலையில், அவர்களில் நால்வரை மங்களூர் தனிப்படை பொலிஸார் வேதாளை கடற்கரைக்கு அழைத்துச்சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர். மேலும் தமிழகத்துக்குள் ஊடுருவிய இலங்கைத் தமிழர்கள் தங்குவதற்கு அடைக்கலம் கொடுத்தார் என்று கூறப்படும் பிரதான நபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவர் குறித்தும் மங்களூர் தனிப்படை பொலிஸார் மரைக்காயர்பட்டினத்தில் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

இலங்கை புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 34 இலங்கைத் தமிழர்களே படகில் கடந்த மாதம் 27ஆம் திகதி புத்தளம் கடற்கரையில் இருந்து புறப்பட்டு, மறுநாள் அதிகாலை இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், வேதாளை கடற்கரை வழியாக மங்களூர் சென்று கடல் வழியாக கனடா நாட்டுக்குச் செல்ல முயன்றபோது கடந்த 11ஆம் திகதி மங்களூர் பொலிஸாரால் இலங்கைத் தமிழர்கள் 34 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்களில், நான்கு பேரை மட்டும் பொலிஸ் காவலில் எடுத்த மங்களூர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணையின் ஒரு பகுதியாக, அவர்கள் இலங்கையிலிருந்து எவ்வாறு கடற்கரையில் வந்து இறங்கினார்கள், அங்கிருந்து எப்படி மரைக்காயர்பட்டிணத்தில் உள்ள வீட்டில் தங்கி இருந்தனர் என்பது குறித்து அவர்களை வைத்து ஒத்திகை நடத்தி அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

மேலும் சட்டவிரோதமாக தமிழகத்துக்குள் ஊடுருவிய இலங்கைத் தமிழர்களை அடைக்கலம் கொடுத்து தங்க உதவிய முக்கிய குற்றவாளி என்று கூறப்படும் இம்ரான்கான் தலை மறைவாகியுள்ளார். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (கு)

# இந்த மாதம் முழுதும் இலங்கைக்கும் தடை

கொழும்பு, ஜூன் 21

இலங்கை உள்ளிட்ட மேலும் சில நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கு பிலிப்பைன்ஸ் அரசு ஜூன் 30 வரை கட்டுப்பாடுகளை நீடித்துள்ளது.

அதன்படி இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, நேபாளம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயணிகளுக்கே தடை நீடிக்கப்பட்டுள்ளது என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி செய்தித் தொடர்பாளர் ஹாரி ரோக் தெரிவித்தார்.

டெல்டா மாறுபாட்டின் தொற்றுகள் பிலிப்பைன்ஸில் பரவுவதை தடுக்கும் நோக்கில் கடுமையான எல்லைக் கட்டுப்பாட்டை உறுதிசெய்வதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக ஏழு நாடுகளுக்கு கட்டுப்பாடுகள் தொடர்ந்து விதிக்கப்படும் என்று ஹாரி ரோக் சுட்டிக்காட்டியுள்ளார். (கு-இ)

# சாகரவுடன் பேசிய 'ராஜபக்ச அன்ட் கோ'

கொழும்பு, ஜூன் 21

பொதுஜன பெரமுனவின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசத்துடன், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச மற்றும் அமெரிக்காவில் இருக்கும் பஷில் ராஜபக்ச ஆகியோர் உரையாடியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக பொதுஜன பெரமுனவின் பங்காளிக்கட்சித் தலைவரான அமைச்சர் உதய கம்மன்பிலவுடன் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து அது பற்றிய கருத்தாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று அறிய முடிகின்றது. எனினும், இது தொடர்பில் கேட்டபோது, "சிரேஷ்ட தலைவர்கள் பேசினார்கள்" என்று மட்டும் சாகர காரியவசம் தெரிவித்தார். வேறு விடயங்களைக் கூறத் தயாரில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய முரண்பாட்டு நிலைமைகள் மற்றும் அடுத்தகட்டமாக எவ்விதமான விடயங்கள் நடைபெறப்போகின்றன என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் விரைவில் விசேட அறிவிப்பொன்றை வெளியிடுவேன் என்று அவர் குறிப்பிட்டார். அதற்கு உகந்த காலமும் நேரமும் நிச்சயமாக அடுத்துவரும் காலப்பகுதியில் ஏற்படும் - என்றும் அவர் தெரிவித்தார். (கு-இ)

# நாடு திரும்பிய கையோடு பஸில் முக்கிய நகர்வுகள்!

கொழும்பு, ஜூன் 21

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் விசேட கூட்டமொன்று அடுத்த வாரமளவில் நடைபெறவுள்ளது எனவும், அதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அமெரிக்கா சென்ற மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச, நாளைமறுதினம் நாடு திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவர் கொழும்பு வந்த பின்பே இந்தக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப் படுத்தும் முக்கியமான நாடாளுமன்ற உறுப்பினர்களும், தொகுதி அமைப்பாளர்களும் குறித்த கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

கட்சியின் எதிர்கால அரசியல் நகர்வுகள், பங்காளிக் கட்சிகளால் பிரயோகிக்கப்படும் அரசியல் அழுத்தங்கள் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக அலசி ஆராயப்படவுள்ளன.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பஸில் கலந்துரையாடுவார் என தெரிய வருகின்றது. (கு-44)

# கோத்தாபயவுக்கு சீன ஜனாதிபதி கடிதத்தில் பிறந்தநாள் வாழ்த்து

கொழும்பு, ஜூன் 21

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கையெழுத்திட்ட பிறந்தநாள் வாழ்த்து கடிதத்தை நேற்று அனுப்பினார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் 72 ஆவது பிறந்தநாள் நேற்றாகும். அதனையொட்டி, சீன ஜனாதிபதி கடிதம் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த வாழ்த்துக் கடிதத்தில்,

உலகில் பெரும் சவால்களை எதிர்கொண்டு, சீனாவும் இலங்கையும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக செயல்படுகின்றன. சீனா - இலங்கை உறவுகளின் வளர்ச்சிக்கு நான் மிகுந்த முக்கியத்துவம் தருகிறேன், மேலும் பலனளிக்கும் விளைவுகளுக்கு எங்கள் மூலோபாய கூட்டாட்சியை ஊக்குவிப்பதற்கும், எங்கள் இரு நாடுகளுக்கும் மக்களுக்கும் அதிக நன்மைகளைத் தருவதற்கும் உங்களுடன் தொடர்ந்து பணியாற்ற விரும்புகிறேன்" என்று சீன ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது. (கு-இ)

# எதிரணியின் சிற்றின்பத்துக்கு தக்க பதிலடி வழங்குவோம்

## சாகர காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

"நாட்டில் கொரோனா பரவலால் மக்கள் நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக்கையில், எதிர்க்கட்சியினர் அரசியல் சிற்றின்பத்தைப் பெறுவதற்காகவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகின்றனர்" என்று பொதுஜன பெரமுனவின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

அமைச்சர் உதய கம்மன்பில மீது ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிரணியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருகின்றமை தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனாவால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு முகங்கொடுப்பதில் அரசு அதிகளவு கவனத்துடன் செயற்பட்டு வருகின்றது. அவ்வாறானதொரு நிலையிலும் எதிர்க்கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருகின்றார்கள்.

இது அவர்களின் அரசியல் பலவீனத்தைக் காண்பிக்கின்றது. குறிப்பாக இத்தகைய நெருக்கடியான காலத்திலும் அரசியல் இலாபத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காகவும், அதன் மூலம் அரசியல் சிற்றின்பத்தை அனுபவிப்பதற்குமே அவர்கள் முனைகின்றார்கள்.

பொதுஜன பெரமுன இந்த விடயத்தை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து விரைவில் எமது கட்சியின் தலைவர் மற்றும் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் கூடி ஆராயப்படும். அதன்



பின்னர் எதிர்க்கட்சிக்கு தக்க பதிலடி வழங்குவோம் - என்றார். (கு-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடர் காலத்தை எதிர்கொள்ள தயார் நிலையில் இருங்கள்

## சாவ. சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவிப்பு

**கொடிகாமம் ஜூன் 21**

**தற்போது நடைமுறையில் உள்ள பயணத்தடை இன்று முதல் சற்று தளர்த்தப்படவுள்ள நிலையில், பேரிடர் காலங்களை எதிர்கொள்வதற்காக உங்களைத் தயார்படுத்தி வைத்திருங்கள் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது; தற்போது நடைமுறையில் உள்ள பயணத்தடை இன்று முதல் சற்று தளர்த்தப்படவுள்ளது. இந்த நிலையில் பின்வரும் விடயங்களில் மக்கள் கவனம் செலுத்தவேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள கோவிட்-19 நோய்த்தடுப்பு விதிமுறைகளான முகக்கவசம் அணிதல், தொற்று நீக்கிகளைப் பயன்படுத்தல், சமூக இடைவெளி பேணுதல் என்பவற்றை மேலும் இறுக்கமாகத் தொடர்ந்து பேணுங்கள். கோவிட்-19 க்குரிய நோய் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக உங்களை சுயதனிமைப்படுத்திக்கொண்டு அறியத்தாருங்கள், பி.சி.ஆர் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். எவ்வகையான நிகழ்வுகளாயினும் மேலும் சில மாதங்களுக்கு ஒத்திவையுங்கள். ஒத்திவைக்க முடியாத நிகழ்வுகளான மரணச்சடங்கு, பதிவுத் திருமணம் ஆகியவற்றைச் செய்வதாயின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையைப் பெற்று பின்னர் அந்நிகழ்வை மேற்கொள்ளுங்கள்.

குடும்ப வருமானத்தை ஈட்டிக்கொள்ளவும், அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யவும் மாத்திரம் வெளியே செல்லுங்கள். உறவினர், நண்பர்கள் வீடுகளுக்கு நேரில் செல்வதை முற்றாகத் தவிர்த்து தொலைபேசி ஊடாக உரையாடுங்கள். கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்போது அதனை ஏற்றிக் கொள்ளுங்கள். பேரிடர் காலங்களை எதிர்கொள்வதற்காக உங்களை தயார்படுத்தி வைத்திருங்கள். யாழ். மாவட்டம் தொடர்ந்தும் கொவிட்-19 தொற்று அதிக ஆபத்துள்ள மாவட்டமாகவே பெயரிடப்பட்டு வருகின்றது. மாவட்டத்தில் கொவிட்-19 இனால் ஏற்படும் மரணங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்றன.

இந்தியாவில் அதிகளவு பாதிப்பை ஏற்படுத்திய டெல்டா வகை வைரஸ் இலங்கையினுள்ளும் கேந்திர முக்கியத்து வம் வாய்ந்த இடங்களில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றுள்ளது. (ப-159)



# செல்வாநகர் கிராமத்திலும் குடும்பங்களுக்கு உதவி

கிளிநொச்சி, ஜூன் 21

கிளிநொச்சி, செல்வாநகர் கிராமத்தில் தெரிவுசெய்யப்பட்ட 109 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமம் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளால், நேற்றுமுன்தினம் இந்த உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபை மற்றும் ஓம் சக்திவேல் கோவில் நிர்வாகியுமான ஓம் சக்திவேல் ஐயா ஆகியோரின் கோரிக்கையின அடிப்படையில் இந்த உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. (ப-159)

# தென்மராட்சியில் நேற்றும் 60 குடும்பங்களுக்கு உதவி

கொடிகாமம், ஜூன் 21

பயணத்தடை காரணமாக பொருண்மியம் நலிவடைந்த குடும்பங்களுக்கு தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையத்தின் ஊடாக நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

சங்கத்தானை, மண்டுவில், சிவன் கோவிலடி, மற்றும் நுணாவில் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 60 குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டது. மீசாலை வடக்கைச் சேரந்த அமரர். நமசிவாயம் டயஸின் முதலாம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தினர் இதற்கான நிதிப்பங்களிபை வழங்கியிருந்தனர். (ப-159)





# அமைச்சர் டக்ளஸுக்கு பயணத்தடை விதிவிலக்கு?

மன்னார், ஜூன் 21

பயணத் தடையை ஏற்படுத்தி மக்கள் ஒன்று கூடுவதை அரசு தவித்துவரும் நிலையில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மக்களை ஒன்று கூட்டி சந்திப்புக்களை முன்னெடுத்து வருகின்றார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் என்ற போர்வையில், தனது அரசியல் பணியையே அவர் இந்த பயணத்தடைக் காலத்தில் முன்னெடுக்கின்றார் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

மன்னார், இலுப்பைக்கடவைக்கு நேற்று முன்தினம் பயணித்த அமைச்சர் அங்கு மக்களை ஒன்று கூட்டி கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-13)



# அறத்திநகர் மக்களுக்கும் உணவுப்பொருள்கள்

கிளிநொச்சி, ஜூன் 21

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட அறத்திநகர் கிராமத்தின் 103 குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. கொவிட் 19 தாக்கத்தால், உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள மக்களுக்கே இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் கலந்துகொண்டு, உணவுப்பொருள்களைக் கையளித்தனர். (ப-13)

# மக்கள் அனைவருக்குமே உதவி கிடைக்க வேண்டும்

முல்லைத்தீவு, ஜூன் 21

உதவிகளானாலும், உலர் உணவுப் பொருள்கள் ஆனாலும், மக்கள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ந.கேதினி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; உணவுப்பொருள்கள் ஒழுங்கின்றி விநியோகிக்கப்படுவதால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுகின்றன. சில குடும்பங்கள் இரு தடவைகள் கூட உணவுப் பொருள்களைப் பெற்றுள்ள நிலையில் சில குடும்பங்கள் உணவுப் பொருள்களையே பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

எனது வட்டாரத்தின் [illegible] கிராம அலுவலரின் ஒழுங்குபடுத்தலின் எல்லோருக்கும் பொருள்கள் கிடைக்கக் கூடிய வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டாலும், உணவுப்பொருள்களைக் கொண்டுவருபவர்கள் குறைவாகக் கொண்டு வருவதன் காரணமாக பல குடும்பங்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது.

உணவுப்பொருள்களை வழங்க வருபவர்கள் கிராம அலுவலருடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவற்றை வழங்கினால், பாதிக்கப்பட்டுள்ள உண்மையான மக்களுக்கு உணவுப்பொருள்கள் சென்றடையும்.

அவ்வாறு இல்லாமல் தன்னிச்சையாக உணவுப்பொருள்களை வழங்கினால் உண்மையான நிலவரப்படி அவை சென்றடையாது -என்றார். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருண்ட யுகத்தை நோக்கி செல்கிறது இலங்கையின் தேசிய பொருளாதாரம்!

## ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 21

**ஜி.எஸ்.பி. போன்ற சலுகைகள் இல்லாமல் போனால் பூச்சிய நிலைக்கு இலங்கையின் பொருளாதாரம் தள்ளப்படும். அடுத்த சில ஆண்டுகளுக்கு நாட்டின் எதிர்காலம் இருண்டதாகவே தெரிகிறது. எனவே அரசு, உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஒத்துழைப்புக்களைப் பெற்று பொருளாதார பின்னடைவுகளிலிருந்து மீண்டெழ கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும்.**

இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. சமூக ஆர்வலர்களுடன் நேற்று நடைபெற்ற இணையவழியூடான கலந்துரையாடலின்போது மேலும் தெரிவிக்கையில்,

**நினைத்ததைவிட அதிகளவில் சாவு**

நாட்டில் கொவிட் வைரஸ் பரவல் காணப்படுகிறது. எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை. நாம் நினைத்ததைவிட அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர். நாம் தெரிந்து கொண்டுள்ள எண்ணிக்கைக்கும் அப்பால் தெரியாமல் கொவிட் தொற்றுக்கு உள்ளான பலர் இருக்கலாம்.

**இந்தளவு வீழ்ச்சியை பார்த்ததேயில்லை!**

அரசுக்கு மக்கள் மத்தியில் காணப்பட்ட புகழ் இவ்வளவு விரைவாக வீழ்ச்சியடைந்தமையை இதற்கு முன்னர் நான் பார்த்ததில்லை. அரசு இவ்வாறு அதன் புகழை இழந்துள்ளபோதிலும், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி இதுவரையிலும் அதற்கான மாற்று வழியொன்றை பரிந்துரைக்கவில்லை. இது மிகவும் அபாயமாக நிலைமையாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாடு எவ்வாறு முன்னேற முடியும் என்பதை சிந்திக்க வேண்டும். தற்போது அரசியலில் மாத்திரமின்றி நாட்டிலும் நெருக்கடிகள் உள்ளன. எனவே எதிர்காலத்தில் என்னவாகும் என்பதை என்னாலும் கூற முடியாது.

**ராஜபக்சக்கள் நினைத்தது நடக்காததால் பாதிப்பு**

கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் வருமான வரி மற்றும் வற் வரி என்பவை குறைக்கப்பட்டன. இதனால் அரசின் வருமானம் குறைவடைந்தது. வரி குறைப்புக்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

**வங்கிகள் சரிவடையும்**

டொலர் பிணைமுறிகளைப் பெற தனியார் வங்கிகளிடம் மீண்டும் கடன் பெறவேண்டியுள்ளது. இதனால் எமது வங்கிகள் சரிவடையக் கூடும். கொரோனா காரணமாக கடன்களை திருப்பிச் செலுத்த இயலாமை மற்றும் பிணைமுறிகளுக்காகப். பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது. நாட்டின் வருமானம் குறைவடைந்துள்ளமையால் நாணயத்தாள்களை அச்சிடுகின்றனர். இவ்வாறு நாணயத்தாள்களை அச்சிடும்போது ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைகிறது. எரிபொருள் விலை அதிகரித்தமை இதன் பிரதிபலனேயாகும்.

**லாபத்தை மக்களுக்கு விடவில்லை**

கடந்த ஆண்டு எரிபொருள் பீப்பாய் ஒன்றின் விலை சுமார் 30 டொலர்களாக குறைவடைந்த போதிலும் அதன் பயனை மக்களுக்கு வழங்கவில்லை. அந்த பணத்தை கடன் செலுத்துவதற்கு பயன்படுத்தினர். கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு தற்போது நாட்டில் இருப்பு இல்லை. அதனால் பங்களாதேஷிடம் கையேந்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். நாட்டை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்லப் போகின்றோம் என்ற பிரச்சினை உருவாகியுள்ளது. கொவிட் தொற்றால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட பல நாடுகள் உள்ளன. அவ்வாறான நாடுகள் அனைத்தும் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதால் அவற்றுக்கு நிதியுதவி கிடைக்கப்பெறுகிறது.

**சீன நிதி இன்னுமில்லையே**

ஆபிரிக்கா நாடுகள் பலவற்றுக்கும் 50 - 60 கோடி டொலர் நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளன. எமது நாட்டுக்கு 100 கோடி டொலர் தேவையாகவுள்ளது. அந்த நிதியை சீனா அல்லது வேறு நாடுகள் தருகின்றோம் எனக் கூறினாலும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. சீனா உள்ளிட்ட ஏனைய நாடுகளும் சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவாதம் இருந்தால் மாத்திரமே பணத்தை வழங்குகின்றன. இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு பல விசேட நிபுணர்கள் பங்களாதேஷ் ஊடகங்களில் கருத்துக்கள் தெரிவித்தனர். இலங்கையால் இந்த கடனை மீளச் செலுத்த முடியாது என்று கூறியே அவர்கள் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டனர். இது நாட்டின் எதிர்காலத்தை பாதிக்கும்.

**இருண்ட எதிர்காலம்**

அடுத்த சில ஆண்டுகளுக்கு நாட்டின் எதிர்காலம் இருண்டதாகவே தெரிகிறது. நாம் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடன் பேச்சுகளை முன்னெடுத்து முன்னேற வேண்டும்.

**தவறான வழியில் பி.ரி.ஐ.**

யங்கரவாத சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட முன்னர் அவர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கால எல்லை குறைவானதாகக் காணப்பட வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறுகின்றது. இவை தற்போது தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இதன் கீழ் பலரும் கைதுசெய்யப்படுகின்றனர். அரசை தூற்றினாலும் கைதுசெய்கின்றனர். இவையே நாட்டுக்கு பிரச்சினையாகியுள்ளன. வடக்கு மக்களுக்கு இழப்பீட்டினை வழங்குதல் , காணாமல் போனோர் பற்றிய பிரச்சினைகள் மற்றும் யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்தல் உள்ளிட்டவை தொடர்பில் நாம் நடவடிக்கைகளை முன்னெ டுத்தோம். ஆனால் தற்போது அரசுக்கு எதிராக கருத்து வெளியிடுபவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யபபட்டு முடக்கப்படுகிறார்கள். கொவிட் தொற்றால் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் ஜி.எஸ். பி.பிளஸ் வரிச்சலுகையும் நீங்குமாயின் பாரதூரமான பொருளாதார பின்னடைவு ஏற்படும்- என்றார். (து-இ)

# சுகாதார பரிசோதகரை அச்சுறுத்தியவர் கைது

கொழும்பு, ஜூன் 21

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் அறிவிக்க சென்றிருந்த பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவரை தூற்றி அச்சுறுத்தல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தவலம பகுதியில் நேற்று இடம்பெற்றது.

அங்கு, 78 வயதான ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதனையடுத்து அவருடைய சகோதரரான குறித்த சந்தேகநபரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுமாறு அறிவிப்பதற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சென்றிருந்த நிலையிலேயே அவர் அச்சுறுத்தல் விடுத்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-இ)

# தாயகம் அறக்கொடை நிறுவனத்தால் உணவுப் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கொரோனாத் தொற்று பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 200 குடும்பங்களுக்கு, தாயகம் அறக்கொடை நிறுவனம் உலருணவுப்பொருள்களை வழங்கியுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 80 குடும்பங்களுக்கும், யாழ்.பெருமாள் கோவிலடி சுற்றுவட்டாரப் பகுதியில் வசிக்கும் 120 குடும்பங்களுக்குமாக 200 குடும்பங்களுக்கு குறித்த உலருணவுப் பொருள்கள் பொதிகளாக வழங்கப்பட்டன. (து)



# மகன் உயிர்மாய்த்ததும் தாயாரும் மரணம்

## ஏறாவூரில் பரிதாபம்

மட்டக்களப்பு, ஜூன் 21

வீட்டில் மகன் தவறான முடிவெடுத்து தூக்கில் தொங்கி உயிர்மாய்த்தமையை பார்த்த தாய், சிலமணி நேரத்தில் மாரடைப்பால் உயிரிழந்த பரிதாப சம்பவம் நேற்று இடம்பெற்றது. இந்தச் சம்பவம் மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஐயங்கேணி பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். புதூர் பிரதேசத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் மைக்கல் (வயது - 46), அவருடைய தாயாரான ஞானப் பிரகாசம் பாக்கியம் (வயது - 70) ஆகியோரே உயிரிழந்தனர்.

மகன் திருமணம் முடித்து வாழ்ந்து வருகின்றார். இரண்டு தினங்களுக்கு முன்னர் மனைவியுடன் சண்டையிட்டுக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறி ஏறாவூர் ஐயங்கேணியிலுள்ள அவரது தாயார் தனிமையில் வாழ்ந்து வரும் வீட்டுக்குச்சென்று தங்கிவந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்றுப் பகல் மகனைக் காணவில்லை என தாயார் தேடிய நிலையில் அறைக்கதவு பூட்டப்பட்டுள்ளதையடுத்து உறவினர்களின் உதவியுடன் அறைக்கதவை உடைத்துச் சென்றபோது அவர் தவறான முடிவெடுத்திருந்தமை தெரியவந்தது. இதனையடுத்து புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவரது தாயாரும் சில மணி நேரத்தில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இருவரின் சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்து வமனையில் வைக்கப்பட்டுள்ளன. (து-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாண ஒடியல் கூழ் (மச்சக்கூழ்)



யாழ்ப்பாணத்துத் தமிழுக்கும் தமிழக ஊர்ப்புறத்தாருக்கும் ஆடிமாதமெனில் கொதிக்கும் வெயிலில் இதமான கூழ் வடித்துக் குடிப்பது வழமை. இது மேலும் பனங்கட்டியுடனும், தேங்காய்ச் சொட்டுடன் சேர்த்துச் சுவைப்பதும் பண்டைய கால மரபு.

**தேவையான பொருள்கள்**

மீன், கணவாய், இறால், சிறிய சிங்க இறால், பயிற்றங்காய், மரவள்ளிக்கிழங்கு, பலாக்கொட்டை, முழைக்கீரை, அரிசி, கோப்பை உலர்ந்த பணங்கிழங்கு ஒடியல் மா, 10 செத்தல் மிளகாய் உடன்குற்றிய தூள், 1 உள்ளங்கை உருண்டை அளவு பழப் புளி, தேக்கரண்டி மஞ்சள் தூள், 2 கோப்பை தண்ணீர், தேவையான அளவு உப்பு

சமையல் ஆயத்தம் செய்தல் மீன், கணவாய், மற்றைய மச்ச உணவுகளைக் கோது உடைத்துக் கழுவி சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக்கொள்ளவும். மேலும் பயிற்றங்காயை கைச் சிறுவிரல் அளவில் நொடித்துடைத்துக்கொள்ளவும். மரவள்ளிக் கிழங்கையும் தோலுரித்து சிறிய பாகங்களாக நறுக்கி வைத்துக் கொள்ளவும். இதே போன்று கீரையையும் தண்டு முறித்துத் தயாரித்துவைத்துக் கொள்ளவும்.

பலாக்கொட்டைகளை அரைவாசியாகப் பிழந்து கோது உரிக்கவும். ஒடியல் மாவை 2 கோப்பை தண்ணீரில் கலந்து 10 நிமிடங்கள் ஊறவைத்து வடித்து எடுக்கவும். இதே போன்று பழப் புளியையும் 2 கோப்பை தண்ணீரில் கலந்து வடித்து சக்கை அகற்றிப் புளிநீர் செய்து கொள்ளவும்.


**தயாரிப்பு முறை**

ஒரு பெரியசட்டி அல்லது பானையில் அரைவாசிக்கு நீர் எடுத்து அடுப்பில் கொதிக்க வைக்கவும். மேலும் இந்த ஏதனத்தில் மீன், கணவாய், நண்டு, இறால், அரிசி, பயிற்றங்காய், மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள்தூள், உப்புத் தூவி 45 நிமிடங்களுக்கு வேக விடவும். நன்றாக வெந்து முடித்த பின்னர் அதனுடன் கீரையைச் சேர்க்கவும்.


இன்னும் ஒரு கோப்பையில் ஊறிய ஒடியல்மா, புளி நீர், மிளகாய், மஞ்சள் தூள் சேர்த்துப் பசையாகக் குழைக்கவும். இந்தக் கூட்டினை வேக வைத்த உணவு, கஞ்சி நீருடன் சுடச்சுடக் கலந்துகொள்ளவும். கூழானது உரிய பதத்துக்கு வந்ததும் அடுப்பில் இருந்து இறக்கிப் பரிமாறலாம்.

**கீழ்குறிப்பு**

சைவ உணவு உண்போர் வெண்டைக்காய், பூசனி போன்ற காய்கறிகள் சேர்த்தும், மரவள்ளி, வாழைக்காய், பலாக் கொட்டை போன்றவற்றை பொரித்துச் சேர்த்தும் கூழைத் தயார் செய்யலாம்.



# ரோஜா பூவைப் போல மென்மையாகவும் சிகப்பாகவும், கவர்ச்சியாகவும் இருக்க!



பெண்களுக்கு அழகு சேர்ப்பது, முகமும் கூந்தலும்தான். அதிலும் முகத்தை எடுத்துக் கொண்டால், கண்களுக்கு அடுத்தபடியாக உதடுகள்தான் முகத்தின் அழகை கூட்டுகின்றன.

அவ்வாறு இருக்கையில், உதடுகள் மென்மையாக இல்லாமல், சிகப்பாக இல்லாமல் இருந்தால், அது ஒட்டுமொத்தமாக அந்த பெண்ணின் அழகையே சீர்குலைத்துவிடும்.

ஆகவே, மூன்று நாள்களுக்கு ஒரு முறை, மிருதுவான துணியை எடுத்து, வெது வெதுப்பான தண்ணீரிலோ அல்லது குளிர்ந்த தண்ணீரிலோ முக்கி, பிழிந்தபிறகு, உங்கள் உதடுகள் மீது ஒத்தடம் கொடுத்து வரும் பட்சத்தில் உதடுகள், ரோஜா பூவைப் போல மென்மையாகவும் சிகப்பாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும்.

# உணர்வு, உடல் மற்றும் குணநலன் அடிப்படையில் ஆண்களின் மனச்சோர்வுக்கான அடையாளங்கள்



**ஆண் மற்றும் அவரின் மனஅழுத்தம்**

ஆண்களுக்கு மனஅழுத்தம் ஏற்படுவது பொதுவானது . 30% ஆண்கள் தங்களுடைய ஆயுள்காலத்தில் ஒரு முறையாவது மனச்சோர்வை அனுபவிக்கின்றனர்.

இந்த மனநிலை கோளாறு . ஒரு மனிதனின் உணர்ச்சி, சிந்தனை , குணநலன் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. டிப்ரசிவ் டிஸார்டர், க்ளினிக்கல் டிப்ரஷன் போன்றவை மனச்சோர்வுக்கான மருத்துவ பெயர்கள் ஆகும். மனசோர்வினால் பாதிக்கப்படும் பெரும்பாலான பெண்கள் தற்கொலைசெய்து கொள்கின்றனர். ஆனால் இந்த எண்ணிக்கை ஆண்களில் குறைவாக உள்ளது. ஆண்களுக்கு கண்டறியப்படாத மனச்சோர்வு இருப்பது இதற்கான காரணமாகும்.

**ஆண்களுக்கான மனச்சோர்வு குறித்த குணநலன் ரீதியிலான அறிகுறிகள்**

1. அதிக மது அருந்துதல்
2. மருந்து பயன்படுத்துதல்
3. குடும்ப மற்றும் சமூக சேர்க்கைகளை புறக்கணித்தல்
4. இடைவேளை இல்லாமல் உழைத்தல்
5. தனது துணையிடம் ஆதிக்கத்துடன் நடந்து கொள்வது அல்லது தவறான முறையில் நடந்துகொள்வது
6. அபாயகரமான செயல்களில் ஈடுபடுவது
7. தனிப்பட்ட மற்றும் வேலை தொடர்பான பொறுப்புகளை சரிவர செய்யமுடியாமல் போவது
8. தற்கொலைக்கு முயற்சிப்பது

**ஆண்களுக்கு மனச்சோர்வு இருப்பதற்கான உணர்ச்சி ரீதியிலான அறிகுறிகள் :**

1. எரிச்சல் உணர்வு
2. கோபம்
3. முரட்டுத்தனமான குணநலன்
4. விரக்தி
5. தவறான தீர்ப்பு வழங்கப்படுமோ என்ற பயத்தில், ஆண்கள் பெரும்பாலும் தங்கள் சோகத்தை வெளிப்படுத்துவதில்லை.

**ஆண்களின் மனச்சோர்வு குறித்த உடலியல் ரீதியிலான அறிகுறிகள்**

1. நாள்பட்ட தலைவலி
2. சோர்வு
3. தூக்க கோளாறு அல்லது ஒழுங்கற்ற தூக்கம்
4. தசைகள் மற்றும் மூட்டுகளில் வலி
5. மார்பு பகுதியில் இறுக்கம்
6. அமைதியின்மை
7. திடீரென்று அதிகரித்த அல்லது குறைந்த பசியுணர்வு
8. செரிமான கோளாறுகள்
9. குறிப்பற்ற எடை இழப்பு
10. நோர்பைன்ப்ரைன் மற்றும் செரோடோனின் அளவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. மனச்சோர்வு இந்த மூளை இரசாயனங்களை பாதித்து வலி மற்றும் மனநிலை கோளாறுகளை ஏற்படுத்துகிறது.

**ஆரம்ப நிலையில் மனச்சோர்வை தடுப்பதற்கான சில குறிப்புகள்:**

1. தியானம் மூலம் மனநிறைவைப் பெறுவதால் மனச்சோர்வு குறித்த எண்ணங்கள் அழிக்கப்படுகின்றன.
2. பூங்காக்களில் சுறுசுறுப்பாக நடைப்பயிற்சி மேற்கொள்வதால் அங்குள்ள பச்சை நிறம் மனஆரோக்கியத்தில் நேர்மறை பாதிப்புகளை உண்டாக்கலாம்.
3. குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் வெளியில் சென்று வரலாம். இதனால் மனஅழுத்தம் மற்றும் மனச்சோர்வை எதிர்த்து போராடும் கட்டமைப்பு உருவாகலாம்.
4. மது அருந்தும் பழக்கத்தை குறைத்துக்கொள்ளது அல்லது முற்றிலும் நிறுத்துவது நல்லது.
5. வெளிப்படையாக பேசுவதால் மனச்சோர்வுக்கான அபாயம் குறையலாம்.
6. பிடித்தவர்களுடன் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளலாம்.
7. அமைதியான சூழலில் படுத்து தூங்குங்கள்.
8. நகைச்சுவை உணர்வுமிக்கவருடன் மற்றும் சிரிப்பூட்டுபவர்களுடன் சிரித்துக் கதையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### மதில்மேல்...

பின்போது எத்தகையை முடிவை எடுப்பது என்பது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவை பங்காளிக் கட்சிகளாக அங்கம் வகிக்கின்றன. எனினும், 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஹக்கீம் மற்றும் ரிஷாத் ஆகியோரைத் தவிர மேற்படி கட்சிகளின் முஸ்லிம் எம்.பிக்கள் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இந்த நிலையில் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்பு உட்பட 10 விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வலுசக்தி அமைச்சர் கம்மன்பிலவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவந்துள்ளது. இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மக்கள் காங்கிரஸ் ஆகியவை தீர்மானித்துள்ளன. எனினும், மேற்படி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எத்தகைய முடிவை எடுப்பார்கள் என்ற கேள்வி அரசியல் களத்தில் எழுந்துள்ளது.

சிலவேளை பிரேரணையை எதிர்த்து வாக்களிக் காவிட்டாலும்கூட நடுநிலை வகிக்கக்கூடும் என தெரியவருகின்றது. கம்மன்பிலவின் கட்சியில் முஸ்லிம் விரோதப் போக்கை கடைபிடித்துவருபவர்கள் இருக்கின்றனர் என்ற குற்றச்சாட்டு இருந்துவருவதால் பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கக்கூடும் எனவும் சிலர் தெரிவிக்கின்றனர். (ம-44)

### கொரோனா...

நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 39 ஆயிரத்து 689ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 996 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து ஆயிரத்து 389ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 35 ஆயிரத்து 719ஆக அதிகரித்துள்ளது எனவும் சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-22)

### வடக்கில்....

டது. 883 பேருக்கு நடத்திய சோதனையிலேயே 43 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேருக்கும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் 2 பேருக்கும், வவுனியா ஆடைத் தொழிற்சாலையில் 6 பேருக்கும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், வவுனியா தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் 4 பேருக்கும், சங்கானை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் மேற்படி தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம)

### சாவு...

அறிவித்துள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 27 ஆண்களும், 20 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 581ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

### மதுவிற்பனை...

விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி உரிமம்பெற்ற மது விற்பனை நிலையங்களை இன்றுமுதல் திறந்திருக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என்று மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன் உயர்தர விடுதிகளில் உள்ள மதுபான சாலைகளில் மது விற்க அனுமதியில்லை. (ம)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு : 26.05.1974 உதிர்வு : 22.05.2021

### செல்வி உமா குமாரவேலு

(ஆங்கில ஆசிரியை,
ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை)

கடந்த 22.05.2021 அன்று இறைபதமடைந்த எமது அன்பு மகளின் மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து அன்னாரின் இறுதிக் கிரியைகளுக்கான உதவிகளைச் செய்த உற்றார், உறவினர், அயலவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அத்துடன் மலர் வளையங்களை வைத்தும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் 31ஆம் நாள் நினைவஞ்சலியில் தங்கள் எல்லோரையும் அழைத்து அந்தியேட்டி கிரியைகளிலும், ஏனைய நிகழ்வுகளிலும் பங்குபற்றச் செய்வதற்கு தற்போதைய சுகாதார நடைமுறைக் கட்டுப்பாடுகளும், சட்ட ஏற்பாடுகளும் இடம் தரவில்லை என்பது குறித்து பெரிதும் மனவருத்தம் அடைவதை பணிவன்புடன் தங்களுக்கு அறியத் தருகின்றோம்.

வண்-வட மேற்கு,
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.
021 221 3158
077 603 1 202


## மதுபோதையில் பெண்கள் மீது தாக்குதல் மூவர் மருத்துவமனையில்

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 21

வவுனியா சுந்தரபுரம் பகுதியில் மதுபோதையில் சில நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. சுந்தரபுரம் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்தே சந்தேகநபர்கள் மேற்படி தாக்குதலை நடத்தியுள்ளனர். வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)



முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சவேரியார்புரம் பகுதியில் உள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தைச்சேர்ந்த 35 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஐக்கிய ராஜ்யத்தை சேர்ந்த சாம்பசிவனின் நிதி பங்களிப்பில் பசி இல்லா மன்னார் அமைப்பின் ஊடாக இந்த உதவிகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டன. (ஜ-56)

## வீதியின் மிகுதிப் பகுதியையும் புனரமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் நவாலியில் பொதுமக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

2016ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், உலக வங்கியின் 'ஐ' செயற்றிட்டத்தின் கீழ் தற்போது புனரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நவாலி ராஜராஜேஸ்வரி வீதியை முழுமையாக செப்பனிட்டு தருமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் இது தொடர்பில் தெரிவிக்கையில், ராஜராஜேஸ்வரி வீதியானது, சி.பி.எம். வீதியிலிருந்து கொத்துக்கட்டி வீதி வரை புனரமைக்கப்பட வேண்டும். ஆனால் இந்த வீதி சி.பி.எம். வீதியிலிருந்து கோவில் வீதிவரையே புனரமைக்கப்படுகிறது.

'ஐ' செயற்றிட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் இந்த வீதியால், உலக வங்கிக்கோ அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கோ அல்லது மானிப்பாய் பிரதேச சபைக்கோ நற்பெயர் ஏற்பட வேண்டும் என்றால், உலக வங்கியின் நிதியைப் பெற்று குறித்த வீதியின் மிகுதி வேலைகளையும் பூரணப்படுத்த வேண்டும்.

இந்த வீதியானது அராலி, மூளாய் போன்ற பகுதிகளுக்கு செல்லும் பிரதான வீதியோடு இணைகிறது. இந்த வீதியை ஏராளமானோர் பயன்படுத்துகின்றனர். மழை காலத்தில் இந்த வீதியால் பயணம் செய்பவர்கள் மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் கரிசனைகாட்டி வீதியின் மிகுதிப் பகுதியான சுமார் 200 மீற்றர் நீளமுள்ள வீதியையும் புனரமைப்பில் உள்ளடக்க வேண்டும்- என்றனர். (த-20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 10 . 09 . 1937



மறைவு 24 . 05 . 2021

கடந்த 24.05.2021 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் தாமோதரம்பிள்ளை கண்மணி


(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21.06.2021) திங்கட்கிழமை காலை 07.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (23.06.2021) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு, புத்தூர். குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 03 . 1951



மறைவு 20 . 06 . 2021

## வைத்திலிங்கம் அருளானந்தம் (அருள்)

(திருவருள் ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளர்- கொடிகாமம்)

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திரு. வைத்திலிங்கம் அருளானந்தம் (அருள்) நேற்று (20.06.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொன்னையா நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகாராணியின் அன்புக் கணவரும், தெய்வீகனின் அன்புத் தந்தையும், பரராசசிங்கம், பூரணம், காலஞ்சென்ற அமிர்தலிங்கம், ஜெயலஷ்மி, சங்கரப்பிள்ளை (திருவருள் ஸ்ரோர்ஸ் - கொடிகாமம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சங்கரப்பிள்ளை (...)
திருவருள் ஸ்ரோர்ஸ்,
கொடிகாமம்.

கச்சாய் வீதி, கொடிகாமம்,
077 3000 834

# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா, ஜூன் 21

வவுனியா புளியங்குளம் பரசங்குளம் பகுதியில் கிணற்றில் இருந்து 26 வயதான குடும்பத் தலைவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் அயலவர்களால் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் வைக்கப் பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-110)

# விற்பனைக்கு

பொமனேரியன், அல்சேசன் நாய் குட்டிகள் மற்றும் ஊர்க்கோழி, புறொய்லர்ஸ், முட்டைக் கோழி குஞ்சுகள் முற்பதிவுக்கு கொடுக்கப் படும். மேலும் 500 முட்டைகள் பொரிக்கும் இயந்திரமும் விற் பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 101 6407

# நினைவஞ்சலி



மலர்வு: 26.05.1974 உதிர்வு: 22.05.2021

எமது பாடசாலையின் ஆங்கில ஆசிரியை

## செல்வி உமா குமாரவேலு

அவர்கள் 22.05.2021 இறைபதமடைந்தார். இவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்.

# கண்ணீர் அஞ்சலி

## பொன்னு பழனிச்சாமி (P.P. ராசா)

தோற்றம் 27.09.1927 மறைவு 19.06.2021



யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ் கன்னாதிட்டி SPORTS CLUB உரிமையாளர் பொன்னு பழனிச்சாமி (P.P. ராசா ) அவர்கள் கடந்த 19.06.2021 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 . 10 . 1950



மறைவு 23 . 05 . 2021

## அமரர் கோபாலகிருஷ்ணன் விவேகவதி

(கணுக்கேணி கிழக்கு, முள்ளியவளை)

கடந்த 23.05.2021 அன்று இறைவடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி கோபாலகிருஷ்ணன் விவேகவதி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (21.06.2021) திங்கட்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும்.

மேலும் எதிர்வரும் (23.06.2021) புதன்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் அஞ்சலி செலுத்தி யோருக்கும் இரங்கல் செய்தி வெளியிட்டோருக்கும், மலர்மாலை, மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றி யினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணுக்கேணி கிழக்கு,
முள்ளியவளை, முல்லைத்தீவு.

குடும்பத்தினர்
கோகுலன்- 077 672 9600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'டெல்டா'....

நாடு தழுவிய பயணக் கட்டுப்பாடுகள் இன்று முதல் தளர்த்தப்பட்டாலும் மக்கள் பொறுப்பின்றி நடந்தால் இந்தியாவின் நிலைமைதான் இங்கு ஏற்படும். இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியாவில் 'டெல்டா' கொரோனா வைரஸ் ஏற்படுத்தும் கொடூர தாக்கங்களை நாள்தோறும் அறிகின்றோம். எனவே, மக்கள் அனைவரும் சுகாதார விதிமுறைகளைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

'டெல்டா' வைரஸ் கொழும்பு மாவட்டத்தில் தெமட்டகொடை என்ற பிரதேசத்தில் ஒரு பகுதியில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை நாம் எடுத்துள்ளோம். ஆனால், அந்த வைரஸ் நாடு முழுவதும் பரவினால் பேரழிவு என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். மக்கள் பொறுப்புணர்வுடன் நடந்தால் இந்தப் பேரழிவைத் தடுக்கலாம். அதைவிடுத்து முழு நாட்டையும் தொடர்ந்து முடக்கி வைத்திருக்க முடியாது. அன்றாடம் வேலை செல்லும் மக்களைப் பட்டினியால் சாகடிக்க முடியாது -என்றார். (ம-ஒ,5,22)

## நாட்டைத்...

இந்த நிலையில் நாட்டைத் திறப்பதானது பெரும் ஆபத்தானது. இதனால் தொற்றாளர்கள் அதிகரித்து சுகாதார சேவையே முற்றிலும் தனது பராமரிப்புத் திறனை இழக்கும் நிலைமை ஏற்படலாம். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மோசமடைந்து வரும் கொரோனாத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மே 21 முதல் நாடு தழுவிய பயணக் கட்டுப்பாட்டை அறிவித்து அரசு எடுத்த முடிவை நாங்கள் பெரிதும் பாராட்டுகின்றோம்.

இந்தக் கட்டுப்பாடுகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற போதிலும் குறைந்தளவு மக்கள் நடமாட்டம் மற்றும் அலுவலகங்களில் அதிகளவு ஆள்கள் ஒன்றுகூடாமையால் தீவிர தொற்றுப் பரவல் மற்றும் அதிக உயிரிழப்புக்கள் உள்ளிட்ட துன்பங்கள் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டன என நம்புகின்றோம். சுகாதார சேவைத்துறை முழுமையாக செயலிழக்கும் அபாயத்தையும் கட்டுப்பாட்டு நடவடிக்கை மூலம் தடுக்க முடிந்தது.

தொற்றுநோய் நிலையைக் கருத்தில் கொண்டு குறைந்தபட்சம் ஜூன் 28ஆம் திகதிவரை சமூக முடக்கலை நடைமுறைப்படுத்துமாறு ஜூன் 11ஆம் திகதி இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் எழுதிய கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும், ஜூன் 21ஆம் திகதி (இன்று) பயணத்தடை நீக்கப்படும். இதையடுத்து ஜூன் 23ஆம் திகதி இரவு 10 மணி முதல் ஜூன் 25ஆம் திகதி அதிகாலை வரை மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு நீக்கப்படும் என்ற அறிவிப்பை நாங்கள் மிகுந்த அக்கறையுடனும் ஏமாற்றத்துடனும் கவனிக்கின்றோம். என்ன மூலோபாயக் கொள்கை அடிப்படையில் கட்டுப்பாடுகள் நீக்கப்படுகின்றன? என்று எங்களுக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

நாட்டில் தற்போது தினசரி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் 50 மற்றும் அதற்கு மேற்பட்ட கொரோனா உயிரிழப்புக்கள் பதிவாகின்றன.

அத்துடன், தொற்று நோய் நெருக்கடியை மேலும் சிக்கலாக்கக்கூடிய 'டெல்டா' திரிபு வைரஸ் சமூகத்தில் பரவலாக இருப்பதற்கான ஆதாரங்களும் உள்ளன. இந்தத் திரிபு தற்போது ஆதிக்கம் செலுத்தும் ஏனைய வைரஸ்களை விட 50 வீதம் அதிவேகமாகப் பரவக்கூடியது.

இந்நிலையில், ஒரு சில நாள்களுக்குக் கூட கட்டுப்பாடுளைத் தளர்த்துவது ஆபத்தானது. இது மக்களின் கட்டுப்பாடற்ற ஒன்றுகூடலுக்கு வழிவகுக்கும். இதன் மூலம் புதிய ஆபத்தான 'டெல்டா' திரிபு விரைவாகப் பரவி ஆபத்தான வகையில் அதிகரிக்கும் என நாங்கள் கருதுகின்றோம்.

இதன் மூலம் தொற்றுநோய் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்து, அதிகளவு இறப்புக்களுக்கு வழிவகுக்கும். அத்துடன், நாட்டின் சுகாதார சேவைத்துறை முற்றிலும் தனது பராமரிப்புத்திறனை இழக்கும் ஆபத்து ஏற்படும்.

கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது என முடிவு செய்யப்பட்டாலும், மாவட்ட அளவில் சரியாக தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்டம் கட்டமாக, மிகக் கவனமாகவே அதனைச் செய்யவேண்டும்.

கட்டுப்பாடுகளை படிப்படியாகத் தளர்த்துவதற்கான மூலோபாயக் கொள்கையை உருவாக்கும் பணியில் இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஈடுபட்டுள்ளது. இந்த வாரத்துக்குள் அந்த மூலோபாயத் திட்டம் இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்படும். இந்த நிலையில், தற்போதைய முக்கியமான தருணத்தில் சமூக முடக்கல் நடவடிக்கையை நீக்காமல் தொடர்ந்து நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சில நாள்களுக்குக்கூட கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிலவிய மோசமாக நெருக்கடி நிலைமைக்கு மீண்டும் எங்களை இட்டுச் செல்லும். இதன்மூலம் கடந்த மூன்று வாரங்கள் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாட்டால் கிடைத்த நன்மைகளையும் இழக்க நேரிடும்- என்றுள்ளது. (ம-ஒ,5,22)

## ஜெனிவா...

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 23ஆம் திகதி வரை நடைபெற்றது. கொரோனா வைரஸ் பரவலால் இணையம் ஊடாகவே மாநாடு நடைபெற்றது. இம்முறையும் அவ்வாறே இடம்பெறவுள்ளது.

46ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கைதொடர்பில்முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக 11 நாடுகளும் வாக்களித்தன. இந்தியா, ஜப்பான் உட்பட 14 நாடுகள் நடுநிலை வகித்தன.

இலங்கையின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவகாரங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட ஆறாவது தீர்மானம் அதுவாகும். மேற்படி தீர்மானத்தை இலங்கை நிராகரித்திருந்தாலும், இலங்கையால் சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தன. அவை நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் இம்முறை ஆராயப்படலாம்.

அதேவேளை, சில அரச சார்பற்ற அமைப்புகளாலும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளாலும் மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்விவகாரம் பற்றியும் விவாதிக்கப்படவுள்ளது என இராஜதந்திர வட்டாரத்திலிருந்து அறியமுடிகின்றது. (ம-44)

## பயணக்....

ரைக்கமைய பயணக் கட்டுப்பாடு இன்று அதிகாலை 4 மணி முதல் தளர்கின்றது.

அதேநேரம் எதிர்வரும் புதன்கிழமை இரவு 10 மணி முதல் வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணி வரையில் மீண்டும் பயணக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படும் என்றும், அதன்பின்னர் பயணக் கட்டுப்பாடு மீண்டும் தளர்த்தப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் போதும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடானது தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் எனவும் அரசு அறிவித்துள்ளது.

உறவினர், நண்பர்கள் வீடுகளில் ஒன்றுகூடுவதற்கான தடையும் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அரசு தெரிவித்துள்ளது. அத்துடன், கடற்கரைகள் மற்றும் பூங்காக்கள் உள்ளிட்ட பொது இடங்களில் ஒன்றுகூடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வுகள் மற்றும் பொதுக் கூட்டங்கள் உள்ளிட்டவற்றுக்கான தடையும் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அரசு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-22)

## நம்பிக்கையில்லாத்...

ளுமன்றக் குழுக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

எரிபொருள்களின் விலைகளை திடீரென அதிகரித்த ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் தலைமையிலான அரசின் தீர்மானத்தை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அரசின் இந்த முடிவு நாட்டு மக்களை மேலும் கஷ்டப்படுத்தும் செயலாகும்.

இந்நிலையில், எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வருகின்றது.

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமானால் அந்தத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்குமா? இல்லையா? என்று கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவே கூடித் தீர்மானிக்கும்.

இந்தப் பிரேரணையை ஆதரிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை எம்மிடம் கேட்டுக்கொண்டது. அவர்களுக்கும் நாம் மேற்படி பதிலையே கூறினோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை 11 மணிக்கு நடைபெறும் -என்றார். (ம-ஒ,5,22)

## வடக்கில்...

ளும் அறிவித்துள்ளன. அதேபோன்று வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தைகள் வழமைபோன்று செயற்படும் என்றும் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அறிவித்துள்ளன.

'மாவட்டத்துக்குள்ளேயே இலங்கை போக்குவரத்து சபையின் சேவை நடைபெறும். அத்தியாவசிய தேவைகளுக்குரிய சேவைகளே நடத்தப்படும். யாழ்ப்பாணத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்குச் செல்லும் அரச அலுவலர்கள் கோரிக்கை முன்வைத்தால், அந்த மாவட்டங்களுக்குரிய சேவைகள் நடத்தப்படும்' என்று இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.குணபாலச்செல்வம் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

'அத்தியாவசிய தேவைக்கான சேவையை நடத்தவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 20 சதவீத தனியார் பேருந்துகளையே சேவையில் ஈடுபடுத்துமாறு பணித்துள்ளனர். மேலும் ஆசன எண்ணிக்கைக்கு அமைவான பயணிகளே ஏற்றப்படுவர். மக்கள் அத்தியாவசிய தேவைக்கு மாத்திரம் பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்' என்று யாழ்ப்பாண மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

'வர்த்தக நிலையங்கள் வழமை போன்று செயற்படும். மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொருள்களைக் கொள்வனவு செய்யமுடியும்' என்று யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

மேலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட சந்தைகள் வழமைபோன்று செயற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தைகளைத் திறக்க அனுமதிக்க வேண்டாம் என்ற எந்தவொரு அறிவித்தல்களும் உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு கிடைக்கவில்லை. இதனால் சந்தைகள் வழமைபோன்று செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ளன என்று அறிய முடிகின்றது. (ஒ,5)

## ஏழு....

கள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூளாய் மற்றும் அளவெட்டியைச் சேர்ந்த மூவரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

அரச அலுவலர்கள் தமது பணிநிமித்தம் சென்ற பின்னர் அவர்களின் வீடுகளை உடைத்து மேற்படி சந்தேகநபர்கள் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. 7 வீடுகள் உடைக்கப்பட்டு இவ்வாறு திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன என்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலதிகவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் 1ம் ஒழுங்கையில் 21 பரப்புக் காணி விற்பனைக்கு. 2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். 1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும் (யாழ் மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரம்)

தொடர்பு:
077 2880 152
076 221 2037

## டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதியாட்டம்

# இந்திய அணி திடீர் சரிவு நியூசிலாந்து முன்னிலை!



**சவுத்தாம்டன், ஜுன் 21**

**ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இறுதியாட்டத்தின் நேற்றைய நாள் நியூசிலாந்து அணிக்குச் சாதகமாக அமைந்தது. இதன்படி நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெறக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றுமுன்தின முதல் நாள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கோலி 44 ஓட்டங்களுடனும் ரகானே 29 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினார்கள்.

மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறாமல் ஆட்டமிழந்தார் கோலி. கோலியை வெளியேற்றிய ஜெமிசன் பன்டையும் 4 ஓட்டங்களுடன் வெறியேற்றினார். ரகானே 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்திய அணியின் சகலதுறை வீரர்களான அஸ்வின் 22 ஓட்டங்களையும், ஜடேயா 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க இந்திய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 217 ஓட்டங்களை முதல் இன்னிங்ஸுக்காகப் பெற்றது. பந்துவீச்சில் ஜெமிசன் 5 இலக்குகளையும், போல்ட், வாக்நேர் இருவரும் தலா ஓர் இலக்கையும் பெற்றனர்.





பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்ப வீரர்களான லாதம், கொன்வே பலமான அத்திபாரத்தை அமைத்துக் கொடுத்தனர். இணைப்பாட்டமாக 70 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் லாதம் வெளியேறினார். அரைச்சதம் கடந்திருக்க கொன்வேயை 54 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் இசாந் சர்மா. நாள் முடிவில் நியூசிலாந்து அணி 2 இலக்குகளை இழந்து 101 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

அந்த அணி 116 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது. ஆனால் 8 இலக்குகளை கைவசம் வைத்துள்ளது. (ம)

# இங்கிலாந்துக்கு ஈடுகொடுத்து ஸ்கொட்லாந்து பேரெழுச்சி!


**லண்டன், ஜுன் 21**

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு ஈடுகொடுத்து ஆட்டத்தை சமன்செய்தது ஸ்கொட்லாந்து.

ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல்கள் பதிவாகவில்லை. இதையடுத்து ஆட்டம் சமநிலையானது.

ஆட்டத்தின் 60 வீதமான நேரத்தில் இங்கிலாந்துதான் பந்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது.

எனினும் இங்கிலாந்தின் ஒவ்வொரு முயற்சியையும் ஸ்கொட்லாந்தின் பின்களம் தகர்த்து கோல் வாய்ப்பை முறியடித்தது. இதையடுத்து ஆட்டம் சமநிலையானது. (ம)





# ஸ்பெயின், போலந்து ஆட்டம் சமநிலையில்

மட்ரிட், ஜுன் 21

யூரோ கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஸ்பெயின், போலந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் அல்வாரோ மொரடா ஸ்பெயினின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார்.

இதையடுத்து ஸ்பெயினின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 54ஆவது நிமிடத்தில் றொபேட் லெவன்டோவஸ்க்கி போலந்தின் சார்பாகக் கோலைப் பதிவு செய்து கோல் கணக்கை சமப்படுத்தினார். அதன் பின்னர் கோல் கணக்கில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

முடிவில் 1:1 என்று ஆட்டம் சமநிலையானது. இந்த ஆட்டத்தில் ஸ்பெய்ன் வெற்றிபெறும் என்று கணிக்கப்பட்டது. ஆனால் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி ஸ்பெய்னக்கு ஈடு கொடுத்தது போலந்து. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.